Registered as a Newspaper　　பக்கங்கள் 16　　விலை ரூபா 5-00

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
18-10-1993
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　ஐப்பசி 02　　(8-10-1993)　　திங்கட்கிழமை　　ஒலை 242

## இலங்கைத்தமிழர் பிரச்சினை தொடர்பாக அவுஸ்ரேலிய வானொலியில் நிகழ்ச்சி

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக 'சிங்கத்தின் கூட்டுக்குள் புலிகள்' எனும் தலைப்பிலான தொகுப்பு நிகழ்ச்சியொன்றை அவுஸ்ரேலிய வானொலி ஒலி பரப்பியுள்ளது. இந் நிகழ்ச்சியில் தேசியத் தலைவர் பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், சிறிலங்காவின் பாதுகாப்பு செயலாளர் ஹமில்ரன் வணசிங்கா, பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா ஆகியோரின் கருத்துக்கள் அடங்கியதாக இந் நிகழ்ச்சி தொகுக்கப்பட்டிருந்தது.

# ராணுவத்திற்கு மேலும் புதிய ஆயுதங்கள்; இவ் ஆண்டு இறுதிக்குள் கிடைக்கும்

## ஆயுதப்படையை நவீனமாக்கத் திட்டம்

(கொழும்பு)

**இவ்ஆண்டு இறுதிக்குள் கணிசமான தொகையில் நவீனரக ஆயுதங்களும் யுத்த தளபாடங்களும் சிறிலங்க படையினருக்கு கிடைக்க உள்ளதாக சிறிலங்காவின் இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்னா தெரிவித்துள்ளார். இதன் மூலம் சிறிலங்கா இராணுவத்தை நவீன மயப்படுத்த முடியும் என்றும் தற்போதுள்ள பலத்திலும் அதிகரித்த பலத்தை இராணுவம் பெற்றுக்கொள்ள இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில் ''தற்போது இராணுவம் மிகவும் பலம் வாய்ந்த இராணுவமாக அமைக்கப்பட்டு உள்ளது இதனை மேலும் பலப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதன் மூலம் வடக்கு கிழக்கு போரை முடித்து விட முடியும்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிகளவு படையினர் முகாம்களில் உள்ளனர் அவர்களுக்கு ஊர்வலம் செல்வதற்கோ, வேடிக்கை, களியாட்டங்கள் உற்சவங்களில் கலந்து கொள்ளவோ முடியாத நிலை இருக்கிறது 'பயங்கரவாதிகளின்' நடவடிக்கை[illegible] தொடர்ந்து நடைபெற்று கொண்டிருப்பின் வடக்கு கிழக்கில் துப்பாக்கி ரவைகளினால்தான் தீர்வு ஒன்றை கொண்டுவரமுடியும் எனவே நாம் இவற்றை நன்கு உணர்ந்து எதிர்காலத்தில் செயல்பட வேண்டும்

இராணுவத்தினரின் தேவைகளை தேடிகண்டுபிடிக்ககூடிய அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். புதிதாக சேர்க்கப்படுபவர்களுக்கு பயிற்சி முகாம்களில் நல்ல பயிற்சி வழங்கப்பட வேண்டும் 'பயங்கர வாதிகளுக்கு' எதிரான இறுதியுத்தமாக இது அமைய வேண்டும் இதற்கான மனோ வலிமையை இராணுவம் பெற வேண்டும்'' என்றார்.

# வீட்டினுள் இருந்து எழுதுபவருக்கு விளக்கமளிக்கத் தேவையில்லை

## பத்திரிகையாளர் மீது சிசில் பாய்ச்சல்

(கொழும்பு)

கிளாலியைவிட்டு பின்வாங்கிய ஒப்பரேஷன் யாழ்தேவி படையினரை கொழும்பு பத்திரிகைகள் விமர்சிப்பதை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா கடுமையாகக் கண்டித்துள்ளார்.

''வீட்டினுளளே இருந்து கொண்டு எழுதுபவர்களுக்கு இராணுவத்தின் நோக்கத்தை புரிந்துகொள்ள முடியாது என்றால் இதற்கெல்லாம் என்னால் விளக்கங்கள் தந்து கொண்டிருக்க முடியாது'' என்றார் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா.

இராணுவத் தளபதி வைத்தியரெட்னா வழிகாட்டலில் நடாத்தப்பட்ட ஒப்பரேஷன் யாழ்தேவி படையினர் கிளாலியிலிருந்து வாபஸ் பெற்றமை தென்னிலங்கை சிங்கள, ஆங்கில பத்திரிகைகளினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டமை தெரிந்ததே.

# சிங்கள இனத்தை காக்க ஒரு பிரபாகரன் தேவை

## துன்னாவே பிரமுத்தி தேரோ உரை

(கொழும்பு)

''சிங்கள இனத்தை தோல்வியில் இருந்து காப்பாற்றுவதற்கு ஒரு பிரபாகரன் தேவை. ஐக்கிய தேசியக்கட்சியில் பிரபாகரன் போன்றவர்கள் எவரும் இல்லை விடுதலைப் புலிகள் பிரபாகரன் தலைமையில் தமிழீழ அரசாங்கம் ஒன்றை உருவாக்குவார்களாயின் அதில் நிச்சயமாக சிங்கள மக்களுக்கு இடம் கிடைக்காது. எனவே நாம் சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கடசி என்று பிரிந்து நிற்காமல் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.'' இவ்வாறு பார்துக்கூமா வத்தகம ஸ்ரீவர்த்தனாராமவிகாரையில் அண்மையில் டென்சில் கொப்பேக்கடுவவின்நினைவாகநடைபெற்ற பிங்கம வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய துன்னாவே பிரசமுத்தி தேரோ கூறினார்

அவர் தொடர்ந்து பேசுகையில், சிங்கள மக்கள் பிறந்தாலும், இறந்தாலும் இந் நாட்டில்தான். அவர்கள் செல்வதற்கு உலகில் எங்கும் ஒரு நாடு இல்லை. இதுதான் சிங்களவர்களுக்கு உள்ள ஒரே ஒரு நாடு. தற்பொழுது நடைபெற்றுவரும் யுத்தத்தில் எப்படியும் சிங்கள இனம் வெற்றி பெற்றே ஆகவேண்டும். எனவே டென்சில் கொப்பேக்கடுவ போன்ற தேசிய வாதிகள் பலர் இன்னும் எமக்குத் தேவைப்படுகிறார்கள். தேசிய இன எழுச்சி பாராளுமன்றத்தினால் ஏற்படப்போவதில்லை. இது கொட்டில்களிலும் குடிசை வீடுகளிலுமே ஏற்படும்.

டி. எஸ். செனநாயக்கா தவிர ஏனைய சிங்களத் தலைவர்கள் அனைவரும் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். ஒப்பந்தங்களும் செய்துள்ளனர். இவ்வாறானவர்கள் வடக்கு கிழக்கில் தேவையான அளவில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பழுதடைந்த நிலையில் மூன்று "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள்

# செம்மலை கிராமம் மீது

தற்போது இராணுவம் மிகவும் பலம் வாய்ந்த இராணுவமாக அமைக்கப்பட்டு உள்ளது இதனை மேலும் பலப்படுத்தவே இந்த நடவடிக்கை எடு

வடக்கு கிழக்கு பேரரை முடித்து விட முடியும்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிகளவு படையினர் முகாம்களில் உள்ளனர் அவர்களுக்கு

வேடிக்கை, களியாட்டங்கள் உற்சவங்களில் கலந்து கொள்ளவோ முடியாத நிலை இருக்கிறது 'பயங்கரவாதிகளின்' நடவடிக்கை தொடர்ந்து

வடக்கு கிழக்கில் துப்பாக்கி ரவைகளினால்தான் தீர்வு ஒன்றை கொண்டுவரமுடியும் எனவே நாம் இவற்றை நன்கு உணர்ந்து எதிர்காலத்தில் செயல்பட வேண்டும்

இராணுவத்தினரின் தேவைகளை தேடிகண்டுபிடிக்ககூடிய அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். புதிதாக சேர்க்கப்படுபவர்களுக்கு பயிற்சி முகாம்களில் நல்ல பயிற்சி வழங்கப்பட வேண்டும் 'பயங்கரவாதிகளுக்கு' எதிரான இறுதியுத்தமாக இது அமைய வேண்டும் இதற்கான மனோவலிமையை இராணுவம் பெற வேண்டும்'' என்றார்.

(கொழும்பு)

''சிங்கள இனத்தை தோல்வியில் இருந்து காப்பாற்றுவதற்கு ஒரு பிரபாகரன் தேவை. ஐக்கிய தேசியக் கட்சியில் பிரபாகரன் போன்றவர்கள் எவரும் இல்லை விடுதலைப் புலிகள் பிரபாகரன் தலைமையில் தமிழீழ அரசாங்கம் ஒன்றை உருவாக்குவார்களாயின் அதில் நிச்சயமாக சிங்கள மக்களுக்கு இடம் கிடைக்காது. எனவே நாம் சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்று பிரிந்து நிற்காமல் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.'' இவ்வாறு பாதுக்கமாவத்தகம ஸ்ரீவர்த்தனாராமவிகாரையில் அண்மையில் டென்சில் கொப்பேக்கடுவவின்நினைவாகநடைபெற்ற பிங்கம வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய துன்னாவே பிரசமுத்தி தேரோ கூறினார்

அவர் தொடர்ந்து பேசுகையில், சிங்கள மக்கள் பிறந்தாலும், இறந்தாலும் இந் நாட்டில்தான். அவர்கள் செல்வதற்கு உலகில் எங்கும் ஒரு நாடு இல்லை. இதுதான் சிங்களவர்களுக்கு உள்ள ஒரே ஒரு நாடு. தற்பொழுது நடைபெற்றுவரும் யுத்தத்தில் எப்படியும் சிங்கள இனம் வெற்றி பெற்றே ஆகவேண்டும்.

எனவே டென்சில் கொப்பேகடுவ போன்ற தேசிய வாதிகள் பலர் இன்னும் எமக்குத் தேவைப்படுகிறார்கள். தேசிய இன எழுச்சி பாராளுமன்றத்தினால் ஏற்படப்போவதில்லை. இது கொட்டில்களிலும் குடிசை வீடுகளிலுமே ஏற்படும்.

டி. எஸ். சேனநாயக்கா தவிர ஏனைய சிங்களத் தலைவர்கள் அனைவரும் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். ஒப்பந்தங்களும் செய்துள்ளனர். இவ்வாறானவர்கள் வடக்கு கிழக்கில் தேவையான அளவில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வீட்டினுள் இருந்து எழுதுபவருக்கு விளக்கமளிக்கத் தேவையில்லை

## பத்திரிகையாளர் மீது சிசில் பாய்ச்சல்

(கொழும்பு)

கிளாலியைவிட்டு பின்வாங்கிய ஒப்பரேஷன் யாழ்தேவி படையினரை கொழும்பு பத்திரிகைகள் விமர்சிப்பதை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா கடுமையாகக் கண்டித்துள்ளார்.

''வீட்டினுளளே இருந்து கொண்டு எழுதுபவர்களுக்கு இராணுவத்தின் நோக்கத்தை புரிந்துகொள்ள முடியாது என்றால் இதற்கெல்லாம் என்னால் விளக்கங்கள் தந்து கொண்டிருக்க முடியாது'' என்றார் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா.

இராணுவத் தளபதி வைத்தியரெட்னா வழிகாட்டலில் நடாத்தப்பட்ட ஒப்பரேஷன் யாழ்தேவி படையினர் கிளாலியிலிருந்து வாபஸ் பெற்றமை தென்னிலங்கை சிங்கள, ஆங்கில பத்திரிகைகளினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டமை தெரிந்ததே.

# செம்மலை கிராமம் மீது கடற்படை பீரங்கித் தாக்கு

## மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

(மணலாறு)

மணலாறு செம்மலை கிராம மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகுகள் நடாத்திய பீரங்கித் தாக்குதல்களினால் அக் கிராமமே வெறிச்சோடியது.

நேற்று முன்தினம் நண்பகல் 12-50 மணிமுதல் செம்மலை பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது கடற்படை பீரங்கிப் படகொன்று சரமாரியான பீரங்கித் தாக்குதல்களையும், கலிபர் தாக்குதல்களையும் இடைவிடாது மேற்கொண்டது. மீண்டும் பிற்பகல் 3 மணிமுதல் ஆரம்பித்த இத தாக்குதல் 4 மணிவரை நீடித்தது.

கடற்படையினரின் இடைவிடாத இத் தாக்குதல்களினால் அப் பகுதி மக்கள் தமது உடைமைகளைக் கைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். இதனால் அக் கிராமத்தின் இயல்பு வாழ்க்கை பாதிப்புற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## யுத்தக்கைதிகளை விடுவிக்க செஞ்சிலுவையுடன் பேச்சு

பொலிஸ் அதிகாரி தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் யுத்தக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிசாரின் விடுதலை தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் பேச்சுக்களை நடாத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறிலங்கா பொலிஸ் தலைமை அலுவலக சிரேஷ்ட அதிகாரி 'லங்காதீப' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இவ்வார ஆரம்பத்தில் இப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ள

(6ஆம் பக்கம் பார்க்க)

## வாகன விபத்தில் சிப்பாய் பலியானார்

இராணுவ வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் இராணுவத்தில் ஒருவர் பலியானார் மூவர் காயமடைந்தனர்.

நாரம்பிட்டிய- கம்பளை வீதியில் வியாழக்கிழமை றக் வண்டி வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளான போது அதில் பிரயாணம் செய்தவர்களுக்கே இந் நிலை ஏற்பட்டது

கம்பளையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றது.

சுமித் நிசந்த என்பவரே பலியானவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

சாயமடைந்த சிப்டாய்களுக்கான

## கண்டியில் 800 பேரிடம் இரத்தம் பெறப்பட்டது

(கண்டி)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்த இராணுவத்தினரின் தேவைக்காக 800 பேரின் இரத்தம் கண்டி மாவட்டத்தில் இருந்து மட்டும் பெறப்பட்டுள்ளது

அநுராதபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கான இரத்தத் தேவையை சமாளிக்கும் நோக்குடன் இவ் இரத்தம் பெறப்பட்டதாகவும் காலை முதல் இரவு வரை இரத்தம் பெறும் வைபவம் நடைபெற்றதாகவும் தெரிய வருகின்றது.

# பழுதடைந்த நிலையில் மூன்று "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள்

## விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படை அண்மையில் ஆர்ஜன்டீனாவிலிருந்து கொள்வனவு செய்த 4 புக்காரா விமானங்களில் மூன்று விமானங்கள் பழுதடைந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பத்து மில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்ட இவ் விமானங்களின் சக்கரத்திலும் அதனுடன் இணைந்த பாகங்களிலும் கோளாறு ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தன கூறியுள்ளதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் பலாலி விமானத் தளத்தில் தரையிறங்கும் போதே இவ் விமானங்கள் பழுதடைந்தது எனவும் பலாலி விமான தளத்தின் மோசமான ஓடுதளத்தினால் இவ்விமானங்கள் கடுமையான முறையில் பழுதடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பாவனைக்குதவாத நிலையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள இந்த மூன்று புக்காரா விமானங்களையும் சரிசெய்ய தொழில்நுட்பவல்லுநர்கள் சிறிலங்கா அரசினால் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விரைவில் கொழும்பு வந்து சேரலாம் என்றும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## இன்றும் நாளையும் படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## செய்தியாளர் யாழ் வருவர்

பிரிட்டனைச் சேர்ந்த செய்தியாளர்ஒருவர் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார். இவருடன் ''லங்காதீப'' சிங்கள செய்தியாளர் குழுவும் யாழ். வரவிருக்கிறது.

## தேர்வு மதிப்பீட்டாளர் கவனத்திற்கு

வடமராட்சிக் கோட்டத்திலும், ஏனைய கோட்டங்களிலும் தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு செய்து முடித்த மதிப்பீட்டுத் தேர்வாளர்களை நாளை செவ்வாய்க் கிழமை மு.ப 8 30 மணிக்கு தத்தமது மதிப்பீட்டு நிலையங்களுக்கு தவறாது வருகை தரும்படி தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## எறிகணை வீச்சு

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து கிளாலி, அல்லிப்பளைப்பகுதிகளை நோக்கி நேற்று முன் தினம் நள்ளிரவு 12 00 மணியளவில் அகோர எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

மேற்படி எறிகணைகள் கரையோரப் பகுதிகளில் விழுந்து வெடித்தன எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை

## வடபகுதிநோக்கி வந்தலொறி தாண்டிக்குளத்தில் தடுப்பு

வடபகுதிக்கு அனுப்பப்படுவதற்கு சிறிலங்கா இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டபென்ரோர்ச்பற்றறிகள், வாள்பிளேட்டுகள், மற்று பெயரிங்குகள் போன்ற பொருள்களுடன் வடபகுதி நோக்கி வந்த பலநோக்கு கூட்டுறவு சங்க லொறியொன்று தாண்டிக்குளம் சோதனைத் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன் இந்த லொறியின் சாரதியும் கிளீனரும் விசாரணைக்காக கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புலனாய்வு அதிகாரிபோல் நடித்துபணம்பறிக்கமுயற்சி

(வவுனியா)

வவுனியாவில் பயணிகள் தங்கும் சுஜானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் தங்கியிருந்த தமிழ் பயணிகளிடம் புலனாய்வுத்துறை அதிகாரி போல் நடித்து பணம் பறிக்க முயன்ற ஒருவர் பின்னர் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இரவு வேளைகளில் பயணிகளை இவர் தனித் தனியாக சோதனையிட்டு முழங்காலில் நிறுத்தி பல வன்முறை நடவடிக்கைகளை மேற்கொண்டார். கைதான இவர் வவுனியாவில் தமிழ் தேசவிரோத குழு ஒன்றின் உறுப்பினர் என பயணிகள் ஊகம் தெரிவித்தனர்.

ரயில்வே ஊழியர் வேலை நிறுத்தம்

# மக்கள் ஒடுக்கப்படும்போதே யுத்தம் ஏற்படுகின்றது

## சர்வோதய தலைவர் தெரிவிப்பு

(லண்டன்)

''மக்கள் ஒடுக்கப்படும்போதும், பாதிக்கப்படும் போதும் தான் யுத்தம் ஏற்படுகின்றது. வடக்கு-கிழக்கிலும் இவ்வாறான நிலையில்தான் யுத்தம் தொடங்கியது. எனவே யுத்தத்தின்மூலம் இப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன் என சர்வோதய தலைவர் ஏ. ரி. ஆரியரட்ன 'சந்தேசிய'விற்கு தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே நிலையான சமாதானத்தை பெறமுடியும். அதுவும் மக்களின் சாதாரண பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். பாதிக்கப்படும் மக்கள் திருப்திப்படுத்தப்படவேண்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசிய சேவையாக ரயில் சேவை பிரகடனம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் ரயில்வே திணைக்களத்தின் சில தொழிற்சங்கங்கள் நேற்று நள்ளிரவு முதல் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். இதனையடுத்துரயில்வே ஊழியர்கள் லீவுஅனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளது. ரயில்வே அத்தியாவசிய சேவையாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### "கொழும்பில் கல்யாணம்"

இந்து மகளிர் கல்லூரி பொன்விழாவில் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதிய அராலியூர் ந சுந்தரம் பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/- (6210)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக் கூடியது. கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி புதியபஸ் நிலையம், யாழ்ப்பாணம் (6315)

## சைவசமய அறிவுப்பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபையினரால் சைவ சமய அறிவுப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைகளில் காரைநகர் கொத்தணியைச் சேர்ந்த பதின்னான்கு பாடசாலைகளின் மாணவர்கள் தோற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## விசேட கூட்டம்

சங்கானைப் பிரதேச கோட்டக்கல்வி அலுவலகப் பிரிவைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் கூட்டம் இன்று பிற்பகல் 2-00 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை நிர்வாகம், தேவைகள், இடமாற்றங்கள் முதலான மிக முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாட விருப்பதால் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மட்டு. வைத்தியசாலையில் பல லட்சம் ரூபா மோசடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொதுவைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் மோசடி செய்யப்பட்டதான புகாரின் அடிப்படையில் வைத்தியசாலையின்களஞ்சியப்பொறுப்பாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் கணக்காய்வு திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று முப்பது நாட்களுக்கும் மேலாக நடத்திய விசாரணைகளை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளின்போது உபகரணங்களை பாவிப்பதிலும், பாதுகாப்பாக வைத்திருப்பதிலும் பாவனைக்கு உதவாத பொருள்களைக் கழிப்பதிலும் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## கனேடியத்தூதுவர் வெனோ வாழைச்சேனைப் பகுதிக்கு விஜயம்

இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் வெனோ பிளான்ஸ் அண்மையில் வாழைச்சேனைப் பகுதிக்குவிஜயம் மேற்கொண்டார்.

இப்பகுதியில், கனேடிய உலக பல்கலைக்கழக நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள விதவைகளுக்கான ஆடு வளர்ப்புத் திட்டத்தை நேரில் சென்று பார்வையிட்ட உயர் ஸ்தானிகர், வாகரை பகுதி விதவைகளின் சுயதொழில் வாய்ப்பிற்காக மாடு வளர்ப்பு திட்டமொன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு, பேத்தாழை, தாசிவன் தீவு போன்ற கிராமங்களில் கடந்தகால வன்செயல்களின் போது குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு சுயதொழில் திட்டமாக ஆடுவளர்ப்புக்கு உதவிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

## முப்பதாண்டு நிறைவு

குருநகர் பாடுமீன விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட முப்பதாண்டு நிறைவு வைபவம் கடந்த வியாழக்கிழமை குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக பி அணிக்கும் அரியாலை விளையாட்டுக் கழகத்துக்குமிடையே உதை பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து குருநகர் பாடுமீன்ஏ அணிக்கும் பாஷையூர் சென் அன்ரனீஸ் ஏ அணிக்கும் உதை பந்தாட்டப் போட்டி நடைபெற்றது இவை சிநேக பூர்வமான வகையில் நடைபெற்றன. (17)

## போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாப் போட்டிகளில் மருதனார்மடம், பண்டத்தரிப்பு, சாவகச்சேரி கோட்ட மாணவர்களுக்கான மேசைப்பந்துப் போட்டி இன்று காலை 8.00 மணிக்குசுண்டிக்குளிவை.எம்.சி.எ மண்டபத்தில்நடைபெறும்

## தென்மராட்சிப் பகுதியில் போர்க்கால கருத்தரங்கு

(தென்மராட்சி)

சிறிலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையை முறியடிக்கும் வகையில் புலிகளுடன் மக்கள் இணையவேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் தென்மராட்சிப் பகுதி எங்கும் போர்க்கால கருத்தரங்கும், அறைகூவலும், தெருக்கூத்தும் இடம்பெற்று வருகின்றன.

தென்மராட்சிக் கோட்டத்தில் வட்டவை ரீதியாக இடம்பெற்று வரும் இக் கருத்தரங்குகள், 'போராடப் போவோம்,' என்ற தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரின் தெருக்கூத்தும் ஒவ்வொரு கிராமம் தோறும் இடம்பெற்று வருகின்றது. விடுதலைப் புலிகள் உறுப்பினரின் கருத்துரைகளும் இடம்பெற்று வருகின்றன. இனி வரும் போருக்கும் மக்கள் தயாராக வேண்டும் என்று அறைகூவலும் விடப்பட்டு சுவர் ஒட்டிகளும்ஒட்டப்பட்டுவருகின்றன. எமது பிரதேசத்திக்குள் இராணுவம் புகுந்தால் அவர்கள் செய்யும் கொடூரத்தினை சித்திரிக்கும் வகையில் தெருக்கூத்துக்களும் இடம்பெற்றும் வருகின்றன இந் நிகழ்ச்சிகளில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டுவருகின்றனர். (86)

## மாற்று குடியிருப்பு வழங்குவதிலும் தொழிலாளர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

மண் சரிவில் வீடிழந்த தொழிலாளர்களுக்கு மாற்று குடியிருப்பு வசதிகள் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், புறக்கணிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

தெரணியகல அசமானகந்த தோட்டத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் புதிய குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்க முன்வரவில்லையெனப் புகார் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களம் உட்பட எந்தவொரு திணைக்களமும் உதவவில்லை என்றும், இவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்கூட வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இத்துடன் கிராமப் புறங்களில் இத்தகைய சம்பவங்கள் நேரிட்டால் சகல அரச இயந்திரங்களும் மும்முரமாக இயங்கி உதவி வழங்குவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இடத்துக்கிடம் அலைக்கழிவு புனானை தமிழர்கள் கவலை

(மட்டக்களப்பு)

கொழும்பு முகத்துவாரம் அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த புனாணை, மைலந்தனைப் பகுதி தமிழர்கள் இடத்துக்கு இடம் அலைக்கழிக்கப் பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு முகத்துவாரம் அகதி முகாமிலிருந்து மட்டக்களப்பு நாவலடி அகதி முகாமிற்குக் கொண்டு வரப்பட்ட ஐம்பது பேரைக் கொண்ட ஒரு குழுவினர் வாழைச் சேனைக்கு ஒரு லொறியில் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும் அங்கு நிலவிய இட நெருக்கடியின் காரணமாக பின்னர் பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் தமது துயர அனுபவங்கள் பற்றி விபரிக்கையில் இரண்டாயிரம்ரூபாபணத்தை தந்து சிங்கள கடிதத்தில் ஒப்பம் வாங்கிய அதிகாரிகள்நாவலடி முகாமிற்கு எம்மை அனுப்பி வைத்தனர் என்றும் குறிப்


மங்களகரமான திறப்பு விழா...

விவசாயிகளே,

சேரன் பல்பொருள் வாணிப வரிசையில்...
சேரன் விவசாய இரசாயன பொருள் வாணிபம்

இன்று காலை (18. 10. 1993) 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கிருமி நாசினிகள்
களை நாசினிகள்
உரவகைகள்
மற்றும் அனைத்து இரசாயனப் பொருள்களிற்கும்

சேரன் விவசாய இரசாயன பொருள் வாணிபம்


## நினைவு கூருகின்றோம்... 1993-10-18

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு முனைக்காட்டுப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

ரகன் (வைரமுத்து கிருபாகரன் - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை மட்டு)

யாழ் தாவடிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

வாசு/கண்ணன் (விசுவநாதபிள்ளை வாசுதேவன் - அல்வாய் மேற்கு-பருத்தித்துறை-யாழ்.)

விக்னேஸ்வரன் (சிவராசா விக்கினேஸ்வரன்-சுதுமலை, மானிப்பாய்-யாழ் )

யாழ்-கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

ஜெனா (புஸ்பலதா செபமாலை - கன்னபட்டி, அடம்பன் மன்னார்)

நோயல் (பியதாச சுகந்தன் -இன்னைப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில் - மன்னார்)

ஆலன் (சிதம்பரநாதன் நிசாந்தன் - 95, இராசபாதை, திருநெல்வேலி - யாழ்.)

ரஜீ (கோமதி பூவிலிங்கம்-ஆலடி ஒழுங்கை, கோண்டாவில்-யாழ்.)

விக்ரர் (ஆறுமுகம் தவராசா - கோண்டாவில் கிழக்கு-யாழ்.)

1988ஆம் ஆண்டு ஸ்கந்தபுரம், அக்கராயன் வீதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

சமித் (— சண்முகம் - நெடுங்கேணி-மணலாறு)

மோகன் (விஸ்வலிங்கம் சிவலிங்கநாதன் - 2ஆம் படிவம், வவுனிக்குளம்)

[illegible]த் (முத்தன் ஜெகசோதி - அச்சுவேலி தெற்கு-யாழ்.)

யாழ். கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

ஹென்றி (பற்றிக் எல்மோர் அன்ரன் அன்ரன் றொபேட் (மச்சி) - குருநகர் - யாழ்.)

மானிப்பாயில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

சின்னத்துரை சற்குணராசா (ராஜன் குளிர்பான நிலையம் - மானிப்பாய்)

1990ஆம் ஆண்டு பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் 2-வது நாளாக சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஒப்பரேசன் ஜெயசக்தி நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

[illegible] (சவரிப்பிள்ளை வசந்தன்

அமைத்துக் கொடுக்க முன்வர வில்லையெனப் புகார் கூறப் உதவி வழங்குவதாகவும் சுட் டிக் காட்டப்பட்டுள்ளது.

## இடத்துக்கிடம் அலைக்கழிவு புனானை தமிழர்கள் கவலை

(மட்டக்களப்பு)

கொழும்பு முகத்துவாரம் அகதிமுகாமில் தங்க வைக்கப் பட்டிருந்த புனானை, மைல ந்தனைப் பகுதி தமிழர்கள் இடத்துக்கு இடம் அலைக்க ழிக்கப் பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு முகத்துவாரம் அகதி முகாமிலிருந்து மட்டக் களப்பு நாவலடி அகதி முகா மிற்குக் கொண்டு வரப்பட்ட ஐம்பது பேரைக் கொண்ட ஒரு குழுவினர் வாழைச் சேனைக்கு ஒரு லொறியில் அனுப்பி வைக்கப்பட்டனர். முன் அறிவித்தல் எதுவுமின்றி இவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும் அங்கு நிலவிய இட நெருக்கடியின் காரணமாக பின்னர் பேத் தாழை விபுலானந்தா வித்தி யாலயத்திற்கு அனுப்பி வைக் கப்பட்டனர்.

இவர்கள் தமது துயர அனு பவங்கள் பற்றி விபரிக்கையில் இரண்டாயிரம்ரூபாபணத்தை தந்து சிங்கள கடிதத்தில் ஒப் பம் வாங்கிய அதிகாரிகள்நாவ லடி முகாமிற்கு எம்மை அனு ப்பி வைத்தனர் என்றும் குறிப் பிட்டனர்.


யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

**புதிய வகுப்புகட்கான அனுமதி — 1994**

ஆண்டு – 6, ஆண்டு – 8

மேற்படி வகுப்புகளில்அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கல்லூரி அலுவலகத் தில் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி – 12-11-1993.

பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக் ப்படும்.

(5856) அதிபர்.



**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**O/L PAPER CLASS**

மாலைநேர வகுப்பு இறுதிப் பிரிவு

திங்கள், வெள்ளி, சனி, ஞாயிறு

நேரம்: 3 p. m. – 6 p. m.

**ஆரம்பம்: 18-10-93 (இன்று)**

மு. கு.:

- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப படுகின்றது.
- குறி பிட்டதொகையினரே அனுமதிக்கப் படுவர். எனவே அனுமதிகளை முன்ன தாகவே பெற்றுக்கொள்ளவும.

(7717)



கிருமி நாசினிகள்

களை நாசினிகள்

உரவகைகள்

மற்றும் அனைத்து இரசாயனப் பொருள்களிற்கும்

# சேரன் விவசாய இரசாயன பொருள் வாணிபம்

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

[சி-7728]


## பருத்தித்துறை நகராட்சிமன்றம் 1994-ம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில் 01. 01. 1994-ம் திகதி தொடக்கம் 31- 12- 1994-ம் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 01- 11 1993ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங் கள் பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் 29- 10 1993-ந் திகதி பிற் பகல் 3.00 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''செயலாளர், நகராட்சிமன்றம், பருத் தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

## அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை | ரூபா. 68,300/- | ரூ. 1500/- | ரூ. 150/- |
| 2. மீன் சந்தை | ரூபா. 13,750/- | ரூ. 1500/- | ரூ. 150/- |
| 3 வான் வண்டிக்காலை | ரூபா. 7,150/- | ரூ. 1500/- | ரூ. 150/- |
| 4. மிதிவண்டி பாதுகாப்பு நிலையம் | ரூபா. 4,400/- | ரூ. 500/- | ரூ. 100/- |
| 5. மாட்டிறைச்சிக் கடை | ரூபா. 1040,00/- | ரூ 1500/- | ரூ. 150/- |
| 6. ஆட்டிறைச்சிக் கடை | ரூபா. 30,000/- | ரூ. 1500/- | ரூ. 150/- |

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 14. 10. 1993

(சி-7724)

வில்-யாழ்.)

**வீக்ரர்** (ஆறுமுகம் தவராசா - கோண்டாவில் கிழக்கு- யாழ்.)

1988ஆம் ஆண்டு ஸ்கந்தபுரம், அக்கராயன் வீதி யில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சா வெய்திய,

**சமித்** (— சண்முகம் - நெடுங்கேணி-மணலாறு)

**மோகன்** (விஸ்வலிங்கம் சிவலிங்கநாதன் - 2ஆம் படிவம், வவுனிக்குளம்)

**கூத்** (முத்தன் ஜெகசோதி - அச்சுவேலி தெற்கு-யாழ்.)

யாழ். கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் இந்தி யப் படையினரின் சுற்றிவளைப்பில் சயனைட் உட் கொண்டு வீரச்சாவெய்திய,

**ஹென்றி** (பற்றிக் எல்மோர் அன்ரன் அன்ரன் றொபேட் (மச்சி) - குருநகர் - யாழ்.)

மானிப்பாயில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல் லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**சின்னத்துரை சற்குணராசா** (ராஜன் குளிர்பான நிலை யம் - மானிப்பாய்)

1990 ஆம் ஆண்டு பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் 2-வது நாளாக சிறிலங்காப் படை யினர் மேற்கொண்ட ஒப்பரேசன் ஜெயசக்தி நடவடிக் கையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**[illegible]** (சவரிப்பிள்ளை வசந்தன் அலோசியஸ் - மாளிகைப்பிட்டி - மன்னார்)

**நெல்சன்** (வடிவேலு இலக்கணகுமார் - செல்விபுரம், பூநகரி மன்னார்)

**கப்டன் கந்தையா** (கந்தசாமி உதயகுமார் - கரணவாய் கிழக்கு, கரவெட்டி யாழ்.)

**ஜெனி** (சின்னப்பொடியன் ஜெகதீஸ்வரன் - கொத்தி வேலி கைதடி தெற்கு - யாழ்.)

**[illegible]** (கந்தசாமி சர்வானந்தம் - கணபதிப்புலம், கோப் பாய் வடக்கு யாழ்.)

**கிசோபன்** (செல்லையா சற்குணானந்தன் - இருபாலை கிழக்கு-கோப்பாய் - யாழ்.)

சாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினரின் ஒப்ப ரேசன் ஜெயசக்தி நடவடிக்கையின்போது ஏற்பட்ட சம ரில் வீரச்சாவெய்திய,

**லெப். [illegible]** பாலச்சந்திரமூர்த்தி காந்திதாஸ்- கொண்டல்கட்டை-வல்வெட்டித்துறை)

**சுகந்தன்** (சின்னத்தம்பி சிவயோகநாதன் - தர்மக்கேணி- பளை)

கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினரின் ஒப்பரே சன் ஜெயசக்தி நடவடிக்கையின்போது உலங்குவானூர்தி தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**லெப். ரகீம்** (பொன்னுச்சாமி விஜயமுரளி-கச்சாய்தெற்கு கொடிகாமம் - யாழ்)

தெல்லிப்பழையில் சிறிலங்கா இராணுவத்தினரின் ஒப்பரேசன் ஜெயசக்தி நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**ரகு** (கந்தசாமி முருகானந்தரகு-பத்தானை, அளவெட்டி மத்தி - யாழ்)

மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இரா ணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

உரும்பராய், மல்லாகம் ஆகிய பகுதிகளில் சிறிலங் காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப் பட்ட [illegible] மற்றும் 02 பெண்கள் உட்பட [illegible] பேர்

1991ஆம் ஆண்டு யாழ்-மண்கும்பான் பகுதியில் சிறி லங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சா வெய்திய-

**2-ம் லெப். ஜீவன்** (கனகுலதீஸ்வரன் - புத்தூர் யாழ்)

1992ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சுகவீனம் கார ணமாக எமைப்பிரிந்த-

**லெப். அருட்செல்வம் / நிசாகரன்** (கணபதிப்பிள்ளை சின்னவன் விளாவெட்டுவான் மட்டு)

சிறிலங்கா விமானப்படையினர் கொக்குவில் நந்தா வில் அம்மன்கோவிலடிப்பகுதியில் நடாத்திய குண்டுவீச் சில் பலியான நயினாதீவைச்சேர்ந்த பெண்மணி

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/7727)

# ஆயிரம் பிறைகண்ட அதிபர் "ஒறேற்றர்"

## ஐயா அவர்களின் 91-வது பிறந்த நாள் சிறப்பு மலர்

### வாழிய ஐயாவே

ஆயிரம் பிறைகள் கண்டினிது
அக்கரை சீமையாம் கனடாவில்
பாயிரம் தமிழர்க்கு பள்ளியாக
பாங்குடன் வளர்த்திடும் வேந்தரேறே

அன்னை ஸ்கந்தாவின் புகழினிற்கே
அன்று நீர் ஆற்றிய சேவைகளோ
என்ன தான் சொல்லதிலே அடங்கிடுமோ
எங்களின் உயர்வுகள் அதிலடங்கும்

பல்கலை கழகமே செல்வோருக்கும்
பந்தடி வெற்றிகள் பெறுவோருக்கும்
எல்லையில் சாதனை புரிவோருக்கும்
எடுத்திடு பாராட்டு எண்ணிலன்றோ

வாழ்த்துகள் பலகூறி வாழ்பவரே
வாழ்த்துகள் பலகூற வைத்தவரே
வாழ்த்துகள் கூறுகிறோம் பல்லாண்டு
வாழிய ஒறேற்றர் ஐயாவே.

- விஞர் சு. துரைசிங்கம்

### வித்துவானும் 'ஒறேற்றரும்'

நான் அரைக்காற்சட்டை போட்ட பொடியனாக ஸ்கந்தாவில் கற்கும்போது எனக்கு தமிழ் கற்பித்த பெருந்தகை வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் அடிக்கடி சொல்லுவார், ''ஒவ்வொரு மாணவனும் தனக்கு கற்பிக்கின்ற நல்லாசான்களை மறவாத நன்றியுடன் அவர்களது சேவையைப் பாராட்ட வேண்டும். அவ்வாறு ஒழுகுதல் ஒவ்வொரு மாணவரதுப தலையாய கடமையாகும். அதைவிட முக்கிய கடமை என்னவெனில் உங்கள் நல்லாசிரியர்களை அவர்கள் உயிருடன் இருக்கும்போதே கௌரவியுங்கள் - பாராட்டுங்கள் அத்துடன் நின்றுவிடாது அந்நல்லாசிரியர்களின் சேவைகளையும், திறமைகளையும் - சாதனைகளையும் உங்கள் இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்துங்கள் - ஞாபகப்படுத்துங்கள். இளைய சந்ததியினருக்கு குருபக்தியைப் போதியுங்கள் மாணவர்-ஆசிரியர் நல்லுறவுகளை வளர்க்க எப்போதும் பாடுபடுங்கள்'' என்று.

எனது மதிப்பிற்குரிய குரு வித்துவான் சி ஆறுமுகம் அவர்களின் போதனைகளின் விளைவே தேசபக்தரான - தமிழ் அறிஞரான - மனிதாபிமானம் மிக்க அதிபரான ஸ்கந்தாவின் ''தவப்புதல்வன்'' ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஐயா அவர்களின் 91-வது பிறந்த நாள் சிறப்பு மலராக உங்கள் கைகளில் தவழும் இவ்விதழாகும்.

நான்கே நான்கு நாட்களில் இம்மலரினை நான் தயாரிக்க முடிந்ததென்றால் இன்றும் ஒறேற்றர் ஐயாவின் மீதான பற்றுமிக்க அவரது மாணவர்களின் அசாதாரணமான ஒத்துழைப்பே காரணம் என்று எண்ணும்போது என் நெஞ்சம் நிறைகின்றது.

எங்கள் எல்லோரதும் வாழ்த்துக்களே போதும்,

## ஒறேற்றர் என்றால் ஸ்கந்தா ஸ்கந்தா என்றால் ஒறேற்றர்

மாணவர்கள் மௌனமாக அந்த ஆங்கிலச் சொற்பொழிவினைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் ஆவலும், அதிசயமும் கொண்டவர்களாய் 'அந்த' இளைஞனின் ஆங்கில மொழி உச்சரிப்பில் மயங்கினார்கள். 1919ம் ஆண்டு யாழ் இந்துக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் முன் ஆயத்தம் எதுவுமின்றி பேச்சுக்கான தலைப்பு அறிவிக்கப்பட்டதும் அந்த இளைஞன் பேசுகிறார் 'வாழ்க்கையின் இலட்சியங்கள்'' என்ற தலைப்பில் 17 ஆவது வயதில் பேசிய இளைஞனை கல்லூரி அதிபர் நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள் பாராட்டிப் பேசுகையில் ''இன்று உண்மையான ஒரு ஒறேற்றர் (ORATOR) பேசக்கேட்டோம்'' என்றார். அன்று முதல் அந்த இளைஞனை 'ஒறேற்றர்' நாவலர் என்றுஎல்லோரும் அழைக்கலாயினர். ஆம்! அந்த இளைஞனே இன்று தனது 91 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் ஸ்கந்தாவின் புகழ்பெற்ற அதிபராக விளங்கிய - ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஐயா அவர்களாவர்.

1944ஆம் ஆண்டு ஒறேற்றர் ஐயா ஸ்கந்தாவின் அதிபராக பதவி ஏற்றபோது சிறிய அளவில் அமைந்திருந்தபாடசாலையில் 291 மாணாக்கர்களும், 15 ஆசிரியர்களும் இருந்தனர் 1962ஆம் ஆண்டு ஒறேற்றர் ஐயா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் போது ஆசிரியர்களும் கொண்டதாக ஸ்கந்தா வளர்ச்சி பெற்றிருந்தது. அப்போது 209 மாணவர்கள் விடுதி மாணவர்களாகவும் மிளிரும் நிலை எய்தப்பட்டது.

யாழ்ப்பாண நகரில் உள்ள பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்பி கல்விகயபிர்கும் வசதியற்றவறிற் பெற்றோர்களைப் பற்றி சிந்தித்த 'ஒறேற்றர்'



ஸ்கந்தாவை செதுக்கிய சிற்பி
சி. சுப்பிரமணியம் (ORATOR)

...க்த வழங்கிப்பாராட்டுப் பெற்றவர் ஒறேற்றர் ஐயா. பௌதிகவியல் துறைக்கு ஆசிரியர் இல்லாத குறையை மாண... தரத்துக்கு நிகரான கல்வியையூட்டக் கூடியதாக ஸ்கந்தாவை வளர்த்தார் மாணவர்களின் கல்வித்தரம் உயரவேண்டும் என்பதற்காக பல புகழ்பெற்ற ஆசிரியர்களை ஸ்கந்தாவுக்கு அழைத்து அவர்களின் சேவையை மாணவர்களுவர்கள் சுட்டிக்காட்டிய போது பரியோவான் கல்லூரியில் கல்வியூட்டிய திரு. துரைராசா ஒரு சிறந்த பௌதிக ஆசிரியரெனக்கேள்விப்பட்டுஅவருக்கு விசேட பதவி வழங்கி ஸ்கந்தா அவரது சேவையை பெற்றது. மிக சிறப்பாகப் பணிபுரிந்த ஆசிரியர்களை ஒறேற்றர் ஐயா மிகவும் கண்ணியத்துடனும், மனித நேயத்துடனும் நேசித்தார்.

பாடசாலையின் இயல்பான செயற்பாடுகளும் குறிக்கோளும் வறிய-குறைபாடுடைய குடும்பங்களைச் சார்ந்த சிறார்களுக்கு சிறந்த கல்வியூட்டுவதாகவே அமைந்திருந்தன யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சிறுபான்மைத் தமிழர் போன்ற சமூக பாங்கினர்க்கு அக்காலத்தில் இந்து சமயத்தவரால் நடாத்தப்பட்ட ஆங்கில பாடசாலைகளில் அனுமதி அளிக்கப்படவில்லை. கந்தையா உபாத்தியாயரது உதவிகட்கு இவர்கள் அருகதை பெற்றிலர். கல்லூரியின் அப்போதைய முகாமையாளர் பி எஸ். அவர்களதும் நல்லாசிகளுடன் ஸ்கந்தாவின் கதவுகளை சாதி-சமய வேறுபாடின்றி சகலருக்கும் திறந்த பெருமைக்குரியவர் ஒறேற்றர் ஐயா அவர்களே. குலபேத உணர்வுகளால் உந்தப்பட்ட மக்கள் ஸ்கந்தாவின் சுற்றுப்புறங்களில் பெருந்தொகையில் இருந்தும் ஒறேற்றர் ஐயாவின் இக்கைங்கரியம் ஒரு துணிச்சலானதொன்றே. ''குறிப்பிட்ட'' வயதெல்லையைத்தாண்டியமாணவர்களை பாடசாலையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஸ்கந்தாவின் மன்னன்!

எளிமை உடை இனிய உரை எங்கள் பள்ளி
ஸ்கந்தாவை எவ்வாறு வளர்த்தல் என்ற
வழி பற்றித் தருமர், சிவ குமாரனோடும்
வலக் கரமாம்''வைச'' ரொடு கிளாக்கரோடும்
முழு மனதோ டுரையாடித் திட்டந்தீட்டி
முறைதவறாப் ''பி எஸ்''சின் நிதியைப் பெற்று
இலங்கையினில் அதை உயர்ந்த தரத்தில் வைத்தாய்
எங்கள் ஒறேற் றர்சுப்பிர மணியம்! வாழ்க

★

உரமான பல கொள்கை, உன் மாணாக்கர்
உயர் வினையே உண்மை யுடன் நாடும் நெஞ்சம்
தரமான கல்வியினை அவர்க்கே ஈந்து
தலை நிமிர்ந்து வாழவழி காட்டும் ஆற்றல்
கரவாது அனைவருக்கும் உதவும் பாங்கு
கடமைகண் ணியம்கட்டுப் பாட்டின் சின்னம்
வரலாற்றுப் பெருமை மிகுங் கந்தர் ஓடை
வரலாற்றினில் ஸ்கந்தா மன்னன் நீயே

★

கல்வியினிற் கவின் கலையிற் களிப்பை யூட்டும்
கரப்பந்தில் உதைபந்தில் துடுப்பாட்டத்தில்
சொற் பொழிவிற் சாரணியச் சேவை தன்னில்
சொல்லு புகழ் உச்சியினுக் கிட்டாய் எம்மை
வெல்லரியர் எனப் பலரும் வியந்தே ஏங்க
வெற்றிகளை நாம் எடுக்கும் வழியைச்செய்தாய்
நல்லவனே! வல்லவனே! ஸ்கந்தாத் தாயை
நாடறியச் செய்தவனே நலமாய் வாழி!

- சிற்பி

### மனிதாபிமானம் மிக்க அதிபர்

1894 ஆம் ஆண்டில் சி. கந்தையா உபாத்தியாயர் அவர்களினால் கந்தரோடைக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பெற்ற யா/கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையானது காலகதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்னும் பெயர் சூட்டப்பெற்று வளர்ச்சி பெற்றுக் கொண்டே வந்தது. பல அதிபர்கள் வந்து பணி பல புரிந்து சென்றனர் 1944ஆம் ஆண்டு ஸ்கந்தா அன்னைக்கு ஒரு பொற்காலம் ஆரம்பமானதென்றே கூறவேண்டும். இக்காலத்திலேதான் ஒறேற்றர் என எல்லோராலும் அழைக்கப்படும் சி. சுப்பிரமணியம் அவர்கள் அதிபராக அழைத்து வரப்பட்டார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த இவரை ஸ்கந்தாவின் அதிபராக்கினால் ஸ்கந்தவரோதயக் கல்லூரி துரிதகதியில் முன்னேறும் என எனது தந்தையார் திரு. சி. மு. அப்புத்துரை அவர்கள் (கணக்காளர், சைவவித்தியாவிருத்திச் சங்கம்) மனதில் எண்ணினார். இதனை இந்து போட் இராசரத்தினம் அவர்களிடமும் கூறினார். அதன் பயனாக இருவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முகாமையாளர் டாக்டர் சி. சுப்பிரமணியம் J. P, O. B. E. அவர்களிடம் சென்று கூறினர். உடனேயே ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களை அழைத்து அதிபர் பொறுப்பினை மனேஜர் அவர்கள் ஒப்படைத்தார். இந்தச் சம்பவம் ஒறேற்றர் அவர்களிடம் எனது தந்தையாரின் நினைவு மலருக்கு கட்டுரை வாங்கச் சென்றபோதே எனக்கு சொல்லியதுடன் தனது கட்டுரையிலும் குறித்திருந்த

[illegible]
நன்றியுடன் அவர்களது சேவையைப் பாராட்ட வேண்டும். அவ்வாறு ஒழுகுதல் ஒவ்வொரு மாணவரதுப தலையாய கடமையாகும். அதைவிட முக்கிய கடமை என்னவெனில் உங்கள் நல்லாசிரியர்களை அவர்கள் உயிருடன் இருக்கும்போதே கௌரவியுங்கள் - பாராட்டுங்கள் அத்துடன் நின்றுவிடாது அந்நல்லாசிரியர்களின் சேவைகளையும், திறமைகளையும் - சாதனைகளையும் உங்கள் இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்துங்கள் - ஞாபகப்படுத்துங்கள். இளைய சந்ததியினருக்கு குரு பக்தியைப் போதியுங்கள் மாணவர்-ஆசிரியர் நல்லுறவுகளை வளர்க்க எப்போதும் பாடுபடுங்கள்'' என்று.

எனது மதிப்பிற்குரிய குரு வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களின் போதனைகளின் விளைவே தேசபக்தரான - தமிழ் அறிஞரான - மனிதாபிமானம் மிக்க அதிபரான ஸ்கந்தாவின் ''தவப்புதல்வன்'' ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஐயா அவர்களின் 9'-வது பிறந்த நாள் சிறப்பு மலராக உங்கள் கைகளில் தவழும் இவ்விதழாகும்.

நான்கே நான்கு நாட்களில் இம்மலரினை நான் தயாரிக்க முடிந்ததென்றால் இன்று ஒறேற்றர் ஐயாவின் மீதான பற்றுமிக்க அவரது மாணவர்களின் அசாதாரணமான ஒத்துழைப்பே காரணம் என்று எண்ணும்போது என் நெஞ்சம் நிறைகின்றது.

எங்கள் எல்லோரதும் வாழ்த்துக்களே போதும், ஐயா நூறாண்டு சிறப்புடன் வாழ்வதற்கு!

-சபா - புஷ்பநாதன்

(ORATOR) பேசக்கேட்டோம்'' என்றார் அன்று முதல் அந்த இளைஞனை 'ஒறேற்றர்' நாவலர் என்றுஎல்லோரும் அழைக்கலாயினர். ஆம்! அந்த இளைஞனே இன்று தனது 91 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் ஸ்கந்தாவின் புகழ்பெற்ற அதிபராக விளங்கிய ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஐயா அவர்களாவர்.

1944ஆம் ஆண்டு ஒறேற்றர் ஐயா ஸ்கந்தாவின் அதிபராக பதவி ஏற்ற போது சிறிய அளவில் அமைந்திருந்தபாடசாலையில் 291 மாணாக்கர்களும், 15 ஆசிரியர்களும் இருந்தனர். 1962ஆம் ஆண்டு ஒறேற்றர் ஐயா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் போது இரண்டாயிரத்து நாற்பத்தைந்து மாணவர்களும், அறுபத்தொரு



ஸ்கந்தாவை செதுக்கிய சிற்பி
சி. சுப்பிரமணியம் (ORATOR)

களை அனுப்பி கல்விகயபிக்கும் வசதியற்றவறிற் பெற்றோர்களைப் பற்றி சிந்தித்த 'ஒறேற்றர்' ஐயா நகரில் உள்ள பெரிய கல்லூரிகளில் ஊட்டப்படும் கல்வியின்

த்த வழங்கிப்பாராட்டுப் பெற்றவர். ஒறேற்றர் ஐயா பௌதிகவியல் துறைக்கு ஆசிரியர் இல்லாத குறையை மாண

[illegible] ஒதயா உபாத்தியாயரது உதவிகட்கு இவர்கள் அருகதை பெற்றிலர். கல்லூரியின் அப்போதைய முகாமையாளர் பி. எஸ். அவர்களதும் நல்லாசிகளுடன் ஸ்கந்தாவின் கதவுகளை சாதி-சமய வேறுபாடின்றி சகலருக்கும் திறந்த பெருமைக்குரியவர் ஒறேற்றர் ஐயா அவர்களே. குலபேத உணர்வுகளால் உந்தப்பட்ட மக்கள் ஸ்கந்தாவின் சுற்றுப்புறங்களில் பெருந்தொகையில் இருந்தும் ஒறேற்றர் ஐயாவின் இக் கைங்கரியம் ஒரு துணிச்சலானதொன்றே. ''குறிப்பிட்ட'' வயதெல்லையைத்தாண்டியமாணவர்களை பாடசாலையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று ஒரு

(4ஆம் பக்கம்பார்க்க)

திருமதி சறோஜினிதேவி புஷ்பநாதன்

1894 ஆம் ஆண்டில் சி. கந்தையா உபாத்தியாயர் அவர்களினால் கந்தரோடைக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பெற்ற யா/கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையானது காலகதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்னும் பெயர் சூட்டப்பெற்று வளர்ச்சி பெற்றுக் கொண்டே வந்தது. பல அதிபர்கள் வந்து பணி பல புரிந்து சென்றனர் 1944ஆம் ஆண்டு ஸ்கந்தா அன்னைக்கு ஒரு பொற்காலம் ஆரம்பமானதென்றே கூறவேண்டும். இக்காலத்திலேதான் ஒறேற்றர் என எல்லோராலும் அழைக்கப்படும் சி. சுப்பிரமணியம் அவர்கள் அதிபராக அழைத்து வரப்பட்டார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த இவரை ஸ்கந்தாவின் அதிபராக்கினால் ஸ்கந்தவரோதயக் கல்லூரி துரிதகதியில் முன்னேறும் என எனது தந்தையார் திரு. சி. மு. அப்புத்துரை அவர்கள் (கணக்காளர், சைவவித்தியாவிருத்திச் சங்கம்) மனதில் எண்ணினார். இதனை இந்து போட் இராசரத்தினம் அவர்களிடமும் கூறினார். அதன் பயனாக இருவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முகாமையாளர் டாக்டர் சி. சுப்பிரமணியம் J. P, O. B. E. அவர்களிடம் சென்று கூறினர். உடனேயே ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களை அழைத்து அதிபர் பொறுப்பினை மனேஜர் அவர்கள் ஒப்படைத்தார். இந்தச் சம்பவம் ஒறேற்றர் அவர்களிடம் எனது தந்தையாரின் நினைவு மலருக்கு கட்டுரை வாங்கச் சென்றபோதே எனக்கு சொல்லியதுடன் தனது கட்டுரையிலும் குறித்திருந்ததைத் தெரிந்து கொண்டேன். இவர் ஸ்கந்தாவின் அதிபரானதுடன் அவ்வாண்டிலேயே இலங்கைப் பல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நமக்கு நல்வழி காட்டிய நல்லாசானை பெருமையுடன் வாழ்த்தும் ஸ்கந்தாவின் புதல்வர்கள்

திரு.திருமதி செல்லையா அமிர்தலிங்கம்
இளைப்பாறிய தபால் அதிபர்
கந்தரோடை - சுன்னாகம்

நா. கிருஸ்ணதாசன் B. A. Sp. Trained
ஆசிரியர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சின்னத்தம்பி நடராசா
பெற்றோல் செற் லேன்
சுன்னாகம்.

Dr. தி இராசேந்திரம் MBBS(cey), MCGP(Sl)
ஈஸ்வரி மருத்துவமனை
சுன்னாகம்

சி. சிவசரவணபவன்
M. A. Dip in Ed S.L. E. A. S
ஓய்வுபெற்ற அதிபர் வைத்தீஸ்வர ம. வி.
கந்தரோடை - சுன்னாகம்

சி. மு. சுப்பிரமணியம்
ஓய்வு பெற்ற பதிலதிபர்
யா/நடேஸ்வரக் கல்லூரி

இளையதம்பி திருநாவுக்கரசு
இளைப்பாறிய தபாலதிபர்
சுன்னாகம்

மார்க்கண்டு இராமலிங்கம்
கிராமசேவையாளர்
சுன்னாகம்

இராசேந்திரம் ஜோர்ஜ்
ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

ந. காளிதாசன்
குரும்பசிட்டி
தெல்லிப்பழை

கனகசபை புவனேந்திரநாதன்
பிரதி அதிபர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

வைத்திலிங்கம் இராசையா
ஓய்வுபெற்ற உதவி அரச அதிபர்
தலைவர், ஸ்கந்தா பழைய மா. சங்கம்

Dr. S. சிவபாலன் M. B. B. S. (Cey)
உரும்பராய்

Dr எஸ். சிவானந்தராஜா M. B. B.S. (Cey)
த மெடிக்கல் சென்ரர்
ஆனைக்கோட்டை

சு. துரைசிங்கம்
அதிபர், மயிலிணி சைவ ம. வி
சுன்னாகம்

இராசரட்ணம் & அரசரட்ணம்
சகோதரர்கள், தொழிலதிபர்கள்
சுன்னாகம்

ஆறுமுகம் சின்னையா கணேசவேல் J.P.
உபதபாலதிபர்
கந்தரோடை - சுன்னாகம்

சி. குமரவேல்
விவாகப்பதிவாளர்
சுன்னாகம்.

சேதுகாவலர் இராசபல்லவன் B.Sc. Dip in Ed
அதிபர்
செல்லாச்சிஅம்மையார் வீதி, சுன்னாகம்

மயில்வாகனம் சத்தியபாலன்
ஓய்வு பெற்ற காணி அதிகாரி முல்லை.
மயிலணி - சுன்னாகம்

சரவணமுத்து சின்னத்துரை
உதவி விவசாயப பணிப்பாளர் (பயிற்சி)
யாழ்ப்பாணம்

ச. சிவனேஸ்வரன் B. Com (Hons)
அதிபர் சண்டிலிப்பாய் இந்து ம.வி.
சண்டிலிப்பாய்

சேதுகாவலர் விபுலானந்தா
பட வரைஞர்
203, பிரதான வீதி, சுன்னாகம்

தம்பையா யோகராசா
விமான செய்தித் தொடர்பு அதிகாரி
இரத்மலானை

ஆறுமுகம் கமலநாதன் B.A, Dip in Ed
அதிபர் தரம் 1
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

ஆறுமுகம் மகாலிங்கம் B.A, SLAS
பிரதேச செயலர்
நல்லூர் - யாழ்நகர்

சபா. புஷ்பநாதன் Dip in Elect. Eng
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமுகவர்
சுன்னாகம்.

எஸ். பி. சிவஞானம் L. L B. (Cey)
சட்டத்தரணி
சுன்னாகம்

சோ. சோமசேகரம்
ஓய்வு பெற்ற அதிபர்
சுன்னாகம்

வி. சிவசுப்பிரமணியம் BA. BSc [London]
ஓய்வு பெற்ற அதிபர் (ஸ்கந்தா)
சுன்னாகம்

வ. வடிவேலு
ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்,
சுன்னாகம்.

சிவ. கருணாகரன்
வரியப்புலம்
சுன்னாகம்.

பொன். நாகரட்ணம் B. Sc. Dip in Ed
ஓய்வு பெற்ற அதிபர் (ஸ்கந்தா)
சுன்னாகம்.

திருமதி த. இராசரத்தினம்
ஆசிரியை
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

இராசகுலசூரியர் சிங்கமாப்பாணர்
உள்ளக கணக்காய்வாளர் N. T. C
பிரதான வீதி - சுன்னாகம்

வி. எஸ். சிவரட்ணம்
மதிப்பீட்டாளர்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்

அ. தற்பரானந்தன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
கந்தரோடை சுன்னாகம்

திருமதி தி. யோகேஸ்வரன்
ஆசிரியை
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**இம் மலர் அச்சுயந்திர மேறிய பின்னர் வாழ்த்துக்களை தெரிவித்த பலரின் சார்பாக**

# ஆயிரம் பிறை கண்ட அதிபர் 'ஒறேற்றர்' ஐயா அவர்களின் 91-வது பிறந்த நாள்

## சிறப்பு மலர்

### நூற்றாண்டு விழாக்கான அன்னை உம்மை அழைக்கின்றாள் வாரீரோ!

கலைவளம் மிகும் எங்கள்
 கல்லூரி கவின் பெறவே
மலை நிமிர்வு போலுயர்ச்சி
 மாண் பெய்த வைத்த செம்மல்
விலை மதிப்பில் லாக்கல்வி
 விளையும் நில மாய் எங்கள்
தலைநேர்ஸ்கந் தாதந்த
 சால்புறுஞா னீவாழி!

ஆண்டுபதி னெட்டாக
 அதிபராய் வீற்றிருந்து
பூண்ட நற் புகழினோடு
 போற்றரும் நற் பணியெல்லாம்
ஈண்டு நாம் எண்ணி என்றும்
 இதயங்கள் கரைகின்றோமே!
மீண்டும் எங்கள் அன்னையும்மை
 விரும்பிவர வேற்றுநூறு
ஆண்டுவிழா தனில்காண
 அழைக்கின்றாள் வாரீரோ!

- க. புவனேந்திரநாதன்

### மனிதாபிமானம்

கலைக்கழகப் புகுமுகத் தேர்விற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தி அனுப்பும் அங்கீகாரம் இக்கல்லூரிக்கு கிடைத்தது. மேலும் 1947ஆம் ஆண்டில் முதலாம் தரக் கல்லூரியாக ஸ்கந்தா உயர்த்தப்பட்டது இவரின் அயரா முயற்சியாலென்றால் மிகையாகாது.

1944ஆம் ஆண்டு முதல் கால் நூற்றாண்டுகளுக்கு ஸ்கந்தாவில் மும்மணிகள் மிளிர்ந்தனர், அஃதாவது மூன்று சுப்பிரமணியங்களே அவர்களாவர்.

முதலாவதாக கல்லூரி முகாமையாளர் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி சுப்பிரமணியம்(J.P O.B.E) அவர்களைக் குறிப்பிடலாம். இவர் கல்லூரிக்கு ''காமதேனு'' போல விளங்கினார். காணி நிலம் வாங்கவோ அன்றி கல்வி உபகரணங்கள் வாங்கவோ, அல்லது கட்டடங்கள் அமைக்கவோ எதற்காயினும் வேண்டிய நிதியை வாரி வழங்கினார். இரண்டாவதாக திரு. சி. சுப்பிரமணியம் (ஒறேற்றர்) அவர்களைக் குறிப்பிடலாம் இவர் அதிபராகக் கடமையாற்றிய போது கல்லூரியின் வெளிவிவகார அமைச்சரைப் போல கல்லூரிக்கும் - கல்வித் திணைக்களத்திற்கும், கல்லூரிக்கும் சமூகத்திற்கும், கல்லூரிக்கும் - அயற்கல்லூரிகள், உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் இடையே தொடர்புபடுத்தும் இணைப்பாளராக விளங்கினார். மூன்றாவதாக துணை அதிபராக விளங்கிய திரு வி சுப்பிரமணியம் அவர்களைக் குறிப்பிடலாம். இவர் கல்லூரியின் உள்விவகார அமைச்சரைப் போல கல்லூரி நேரசூசி அமைத்தல், கட்டட நிர்மாணம், நிழல்தரு மரங்கள் நாட்டல், கற்பித்தல் மேற்பார்வை, ஆசிரியர்-மாணவர் தேவைகளை நிறைவேற்றல் போன்ற உள்விவகாரங்களை நிவர்த்தி செய்வதில் ஈடுஇணையற்றவராக விளங்கினார் இம் மும்மணிகளும் ஸ்கந்தாவின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த உத்தமர்களாவர். இம்மூவருள் ஒருவராகியஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் இன்று 91 ஆவது அகவை பூர்த்தி செய்வதையிட்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி அகமகிழ்கின்றோம்.

### ஒறேற்றர்

விதிமுறை இருந்தது. அத்தகைய மாணவர்கள் பொது தரதார கல்விப்பரீட்சையில் சித்தியடைந்து தொழில் தேடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் எனக்கருதி நான் வயது கூடிய மாணவர்களையும் கல்லூரியில் தொடர்ந்து படித்து பரீட்சை எடுப்பதற்கு உதவினேன்'' என்கிறார் ஒறேற்றர் ஐயா.

எப்போதும் மாணவர்- ஆசிரியர்-அதிபர் ஆகியோருக்கிடையேயான நல்லுறவுகளை வளர்ப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்ட ஒறேற்றர் ஐயா, அதன் மூலம் கல்லூரிக்கு பல வெற்றிகளை ஈட்டித் தந்தார்.

1962-ம் ஆண்டு ஒறேற்றர் ஐயா ஸ்கந்தாவின் அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற போது ஸ்கந்தா அன்னை தன்னகத்தே அறுபத்தியொரு ஆசிரியர்களையும், இரண்டாயிரத்து நாற்பத்தைந்து மாணவர்களையும் கொண்டிருந்தது டன் இருநூற்றொன்பது மாணவர்கள் விடுதியில் தங்கியுமிருந்தனர். இலங்கைத்தீவிலேயே இருநேர பாடசாலையாக இயங்கியதுஎமது ஸ்கந்தவரோதயக்கல்லூரியேயாகும் இலங்கை பலகலைக்கழகத்துக்கு நாற்பது மாணவர்களை அனுப்பி யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில் மாத்திரமன்றி இலங்கைச் சரித்திரத்திலே சாதனைபுரிந்த கல்லூரி என்ற புகழை பெற முன்னின்று உழைத்த எமது அதிபர் ஒறேற்றர் ஐயா ஸ்கந்தாவின் அதிபராக இருந்த காலம் பொற்காலம் என்றால் அது மிகையாகாது.

தேசபக்தர்களினதும், கல்விமான்களினதும் வாழ்க்கை அனுபவங்கள் சரித்திரமாக்கப்பட்டு பிற்சந்ததியினருக்கு வழிகாட்ட வேண்டும் அவ்வாறு தமது அனுபவங்களையும் சுயசரிதையாகவே ஒறேற்றர் ஐயா தமிழ்ச் சமுதாயத்துக்கு ஒளியூட்டி வழிகாட்டமுன்னின்று உழைக்க வேண்டும் என கோரி பணிவுடன் ஐயாவுக்கு சகல ஐஸ்வரியங்களும் கிடைக்க வேண்டும் எனஇறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

மலர் தயாரிப்பு: துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்.
சுன்னாகம்.

# உப உணவு செய்கையில் உடன் ஈடுபடவும்

## த பொ மே. நி. கோரிக்கை

யாழ் மாவட்டத்திலே உப உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்பட்டு வரும் இவ்வேளையில் எமது மண் வளத்தினை உரிய முறையில் பயன்படுத்தி உப உணவுப் பயிர்ச் செய்கையில் சகல மக்களையும் ஈடுபடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

கடந்த காலங்களில் யாழ் மாவட்டத்திலே புகையிலை, வெண்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் போன்ற பணப் பயிர்களை உற்பத்தி செய்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி சந்தைப்படுத்தி வந்ததோடு கணிசமான அளவு இலாபத்தையும் விவசாயிகள் பெற்று வந்தனர். அத்தோடு எமது மாவட்டத்திற்கு தேவையான உப உணவுப் பொருள்களைவெளி மாவட்டங்களிலிருந்தே பெற்றுவந்தோம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் எமது உற்பத்திப் பொருள்களை வெளி மாவட்டங்களுக்கு அனுப்பவோ எமக்குத் தேவையான பொருள்களை அங்கிருந்து பெற்றுக் கொள்ளவோ முடியாத நிலை வெகு விரைவில் தோன்றலாம்.

இதன் மூலம் இங்கு தோன்றக்கூடிய உணவுத்தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக ஒரு அங்குல நிலத்தையும் வீணாக்காமல்குறுகியகாலத்தில் நல்ல விளைவினைத் தரவல்ல பயறு உழுந்து சோயா அவரை, கௌபி, குரக்கன், சோளம், தினை, சாமை, வத்தாளை போன்ற பயிர்களை செய்கை பண்ணுவதற்கான முயற்சிகளில் உடன் ஈடுபடுமாறும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அகதிகளாகவுள்ள

# 3000 இலங்கைத் தமிழர் டிசெம்பரில் அனுப்பப்படுவர்

(சென்னை

டிசெம்பர்மாதம் மூவாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று தமிழக அரசு வருவாய்த்துறைமுதன்மைஆணையாளர் சி எம். ராம் தாஸ் தெரிவித்தார்

மதுரையில் செய்தியாளரிடம் பேசிய அவர் இதுவரை இலங்கைத் தமிழ் அகதிகள் 337 முகாம்களில் பராமரிக்கப்பட்டு வந்ததாகவும் இவர்கள் படிப்படியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவருவதால், தற்பொழுது முகாம்கள் 130 ஆகக் குறைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.


# மாத்தளை தேடுதலின் போது 8 பேர் பொலிசாரால் கைது

(மாத்தளை)

தந்தையின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வீட்டுக்குச் சென்ற மகன் ஒருவரும் அவரது மைத்துனர் ஒருவரும். பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் பொலிசார் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது வெளி இடங்களில் இருந்து வந்து தங்கியிருந்த அனைவரும் கைது செய்யப்பட்டனர். இத் தேடுதலின் போதே வவுனியாவிலிருந்து தனது தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற அசோக்குமார் (17 வயது) என்பவரும், புசல்லாவையிலிருந்து வந்த அவரது மைத்துனரும் கைது செய்யப்பட்டனர்.

# நாலாண்டு நீங்காத நினைவுகளில்...



திரு.

## செல்லையா அரியரத்தினம்

[முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்]

மலர்வு 20. 11. 1926

உதிர்வு 02. 10. 1989


"எமை விட்டகன்ற நாளில் இருந்து சுமை கொண்டது எம் இதயம்"

குடும்பத்தினர்.


கோவில் வாசல்,
இணுவில். (சி-7723)

# நினைவஞ்சலிகள்

6-ம் ஆண்டு



18-ம் ஆண்டு



அவர்களைக் குறிப்பிடலாம். இவர் கல்லூரிக்கு ''காம தேனு'' போல விளங்கினார். காணி நிலம் வாங்கவோ அன்றி கல்வி உபகரணங்கள் வாங்கவோ, அல்லது கட்டடங்கள் அமைக்கவோ எதற்காயினும் வேண்டிய நிதியை வாரி வழங்கினார். இரண்டாவதாக திரு. சி. சுப்பிரமணியம் (ஓறேற்றர்) அவர்களைக் குறிப்பிடலாம் இவர் அதிபராகக் கடமையாற்றிய போது கல்லூரியின் வெளிவிவகார அமைச்சரைப் போல கல்லூரிக்கும் - கல்வித் திணைக்களத்திற்கும், கல் லூரிக்கும் சமூகத்திற்கும், கல்லூரிக்கும் - அயற்கல்லூரிகள், உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் இடை யே தொடர்புபடுத்தும் இணைப்பாளராக விளங்கினார். மூன்றாவதாக துணை அதிபராக விளங்கிய திரு வி சுப்பிரமணியம் அவர்களைக் குறிப்பிடலாம். இவர் கல்லூரியின் உள்விவகார அமைச்சரைப் போல கல்லூரி நேரசூசி அமைத்தல், கட்டட நிர்மாணம், நிழல்தரு மரங்கள் நாட்டல், கற் பித்தல் மேற்பார்வை, ஆசிரியர்-மாணவர் தேவைகளை நிறைவேற்றல் போன்ற உள்விவகாரங்களை நிவர்த்தி செய்வதில ஈடுஇணையற்றவராக விளங்கினார் இம் மும்மணிகளும் ஸ்கந்தாவின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த உத்தமர்களாவர். இம்மூவருள் ஒருவராகியஓறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் இன்று 91 ஆவது அகவை பூர்த்தி செய்வதையிட்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி அகமகிழ்கின்றோம்.

அ. புத்துரை தற்பரானந்தன்
தெல்லிப்பழை கல்விக் கோட்ட
திட்டமிடல் அலுவலர்

னின்று உழைத்த எமது அதிபர் ஓறேற்றர் ஐயா ஸ்கந்தாவின் அதிபராக இருந்த காலம் பொற்காலம் என்றால் அது மிகையாகாது.

தேசபக்தர்களினதும், கல்விமான்களினதும் வாழ்க்கை அனுபவங்கள் சரித்திரமாக்கப்பட்டு பிற்சந்ததியினருக்கு வழிகாட்ட வேண்டும் அவ்வாறு தமது அனுபவங்களையும் சுயசரிதையாகவே ஓறேற்றர் ஐயா தமிழ்ச் சமுதாயத்துக்கு ஒளியூட்டி வழிகாட்டமுன்னின்று உழைக்க வேண்டும் என கோரி பணிவுடன் ஐயாவுக்கு சகல ஐஸ்வரியங்களும் கிடைக்க வேண்டும் எனஇறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

மலர் தயாரிப்பு: துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம்.

(-சி7718)

தில் கலந்து கொள்வதற்காக வீட்டுக்குச் சென்ற மகன் ஒருவரும் அவரது மைத்துனர் ஒருவரும். பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் பொலிசார் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது வெளி இட

யிருந்த அனைவரும் கைது செய்யப்பட்டனர். இத் தேடுதலின் போதே வவுனியாவிலிருந்து தனது தந்தையின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற அசோக்குமார் (17 வயது) என்பவரும், புசல்லாவையிலிருந்து வந்த அவரது மைத்துனரும் கைது செய்யப்பட்டனர்.

"எமை விட்டகன்ற நாளில் இருந்து சுமை கொண்டது எம் இதயம்"

கோவில் வாசல்,
இணுவில். (சி-7723)

குடும்பத்தினர்.

# நினைவஞ்சலிகள்

**6-ம் ஆண்டு**



## செல்லையா சிவமூர்த்தி

(முன்னாள் வடபிராந்திய (இ.போ.ச.) களஞ்சியப் பொறுப்பாளர்)

பிறப்பு: **6-4-1922**
அழிப்பு: **18-10-87**

**18-ம் ஆண்டு**



திருமதி

## சிவமூர்த்தி சிவசுந்தரி

பிறப்பு: **22.07.1926**
இறப்பு: **30.07.1975**


**தினேஷ் பாணகம்**
மானிப்பாய்

எனது பெற்றோரின் நினைவு நாளாகிய இன்று தொடக்கம் எனது பேக்கரி ஊழியர்கள் கூட்டு முயற்சியால் 'நோத்' பிஸ்கற்றுக்களை உற்பத்தி செய்யத் தீர்மானித்துள்ளார்கள். வாடிக்கையாளர்களின் ஆதரவை நாடி நிற்கிறோம்.

**தினேஷ் பாணகம்**
**சந்தைச் சதுக்கம்**
மானிப்பாய்

அன்பு மகன்: சிவமூர்த்தி சிவலிங்கம்

(சி-7726)

**தொழிற்பயிற்சி**

எமது தொழிற்சாலை படித்த வாலிபர்களுக்கான மாப்பண்டம் தயாரிக்கும் தொழிற்பயிற்சியைத் தொடர்ந்தும் அளித்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.


தமிழீழக் கல்விப் பொதுத் தேர்வு

## பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் தேர்வு நடத்த ஏற்பாடு

அண்மையில் நடைபெற்று முடிந்த தமிழீழப் பொதுக் கல்வித் தேர்விற்கு இராணுவ நடவடிக்கையினால் தோற்ற முடியாதுபோன தென்மராட்சி, பளை, அச்சுவேலிப் பகுதி மாணவர்களுக்கு மீண்டும் தேர்வில் தோற்றுவதற்கான ஏற்பாடுகளை தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வுச் சபை மேற்கொண்டுள்ளது. எனவே தேர்வில் தோற்றாத மாணவர்களும் இம்மாதம் 30ஆம், 31ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் விஞ்ஞானச் செய்முறைத் தேர்வில் தோற்ற வேண்டுமெனவும் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## றிக்சிறியோன சம்பியனாகியது

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியில் மென்பந்து விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான போட்டி ஒன்று கடந்த வாரம் சாவகச்சேரி சிவன் கோவிலடி மைதானத்தில் சாவகச்சேரி இலங்கை வங்கியின் ஆதரவில் இடம்பெற்றது இப்போட்டியில் பங்குபற்றிய கழகங்களில் றிக்சிறியோன் கழகம் சம்பியனைத் தட்டிக்கொண்டது. கைதடி சரஸ்வதி விளையாட்டு கழகம், மட்டுவில் யூனியன் கல்லூரி வி. கழகம், மிருசுவில் சென்நிக்லஸ் வி. கழகம் இலங்கை வங்கி ஊழியர் வி. கழகம், சாவகச்சேரி சிறிதாஸ் வி. கழகம், சாவகச்சேரி றிக்சிறியோன் வி. கழகம் என்பன பங்குபற்றின வெற்றியீட்டிய கழகங்களுக்கு இலங்கை வங்கி ஊழியர்கள் சார்பில் உதவி பொதுமுகாமையாளர் திரு. எஸ் உலகநாதன் அவர்கள் விளையாட்டு அன்பளிப்பு பொருள்களை வழங்கினார். (86)

## 33-ம் ஆண்டு நிறைவு விழா

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக 33ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 30, 31-ம் திகதிகளில் திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

முதலாம்நாள் விளையாட்டுப் போட்டியின் போது பார்வையாளருக்கான நிகழ்ச்சிகளாக பத்துமைல் மரதன், இரண்டு மைல நடைப்போட்டி வினோத உடைப்போட்டி கழகங்களுக்கான அஞ்சல்போட்டி கபாடி இறுதிப்போட்டி ஆகியனவும்,

மறுநாள் கழக இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டி கழகங்களுக்கிடையிலானகயிறு இழுத்தல, பெண்களுக்கான சங்கீதக் கதிரை ஆகியனவும் இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களால் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இளம் கழக வீரர்களின் மயிாககூச்செறியும் சாகசமும் பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும். கபாடி சுற்றுப் போட்டி விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 20 ஆகும். (யோ)

## பிறப்பு சான்றிதழ் வழங்கப்படுகிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை காணிப்பதிவகத்தில் அவசர தேவைகட்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு க. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். அடையாள அட்டை, நிவாரணம் போன்ற தேவைகளுக்கு ஆளுக்கொரு பிறப்புச்சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றது. தேவையானோர் உடன் விண்ணப்பித்துப் பெறுமாறும் மேலதிக மாவட்டப் பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார். இறப்புச் சான்றிதழ்கள், விவாகச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்கு எதுவித கட்டுப்பாடுகளும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## இரவு நேர கல்விச் சேவை

சுதுமலை மேற்கு கரிகரன் சனசமூக நிலையத்தில் அண்மையில் இரவு நேரக் கல்விச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. நிலையத்தலைவர் பா. இரவீந்திரமூர்த்தி தலைமையில்இதுதொடர்பாக நடைபெற்ற வைபவமொன்றில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். டிவகலாலா, சனசமூக நிலையங்களின் சம்மேளனத் தலைவர் திரு வை. செகராசசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். இச்சேவை தினமும் ஆறு மணிமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சிந்தனைக்கு

ஓர் அடிமை தன் விலங்கு சங்கிலியை பொன் அணி கலனாக தழுவும்போது அடிமையின் எசமானர் பெறும் வெற்றி முழுமையாகிறது.

- காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 18-10-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த பெ எண் - 05

# அடிமைகள் பற்றி நாம் பேசவில்லை

தென்னிலங்கையில், கணிசமான தமிழர்கள் இன்று வாழ்வதினால், இலங்கையில் தமிழர் தேசிய இனப் பிரச்சினை என்பதே இல்லை எனச் சாதிப்பதில் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முனைப்பாக ஈடுபட்டு வருகின்றார். ஆனால், அவர் தென்னிலங்கையில் தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழ்வதையோ, அன்றி தினசரி நூற்றுக்கணக்கில் கைதாவதையோ கவனத்தில் கொள்வதாக இல்லை அத்தோடு, எப்படிப் பட்ட தமிழர்கள் தென்னிலங்கையில் வாழ்கின்றார்கள் என்பது குறித்தும் அவர் எண்ணவில்லை.

கொழும்பில் அண்மைக் காலமாக தமிழர்கள் வகை தொகையின்றிக் கைது செய்யப்படுகின்றனர். நேற்று முன்தினம் மட்டும் ஒரே நாளில் 500 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்கைதுகளுக்கு காரணம் கிடையாது. கைதாபவர்கள்எவராகவும்இருக்கலாம். அது பற்றி அரசிற்குக் கவலையும் கிடையாது கைதாவதற் குரியே ஒரே அடிப்படைத் தகுதி தமிழர்கள் என்பது மட்டும்தான்.

ஆனால், இவ்வாறாக கணிசமான தொகையினர் கொழும்பில் கைதாவதற்கு கொழும்பில் குறிப்பிடத்தக்க அளவில் தமிழர்கள் இருப்பதும் ஒரு காரணம் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் இதற்குப் பல காரணங்கள் உண்டு.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவு ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதன் விளைவு கொழும்பை அரசியல் நிர்வாக, பொருளாதார மையமாக்கியது. இதன்விளைவாக, கொழும்பில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் வாழவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. ஆயினும் தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சி கண்ட பின் அரசியல் மையம் வலுவிழந்து போய்விட்டதாயினும், நிர்வாக, பொருளாதார மையம் பெரிதாக மாற்றமடையவில்லை. இதனால் ஒரு பகுதியினர் தொடர்ந்தும் அங்கே வாழவேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகியது.

ஆனால், இன்று கொழும்பில் வாழ்பவர்களில் கணிசமான தொகையினர், தேசிய விடுதலை என்பதை விட சுகபோக வாழ்விற்காக அடிமைத் தனத்தை ஏற்க முற்படுபவர்கள். இவர்கள் சிறிலங்காவின் கொழும்பில் வாழ விரும்பவில்லை. இவர்கள் மேற்குலகில் நவீன

# சுயாட்சி பெறும் பாலஸ்தீன பகுதியை அரபாத்தால் நிர்வகிக்க முடியுமா?

கடந்தமாதத்தில் வாஷிங்டனில் இசுரேலிய பாலஸ்தீனிய உடன்பாடு கையெழுத்தாகியதும், அதில் பாலஸ்தீனியர்களுக்கு ஜெரிக்கோ மற்றும் காஸாப் பகுதிகளில் வரையறைக்குட்பட்ட சுயாட்சி வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே. ஆனால் இந்தப் பகுதிகளில் விரும்பத்தகாத சில சம்பவங்கள் அதன் பின்னர் இடம் பெற்று விட்டன. இரண்டு பக்கத்திலும் இருக்கும் கடும் கோட்பாட்டாளர்கள் இந்தச் சமாதானச் சூழலை திசை திருப்ப முயற்சிகள் மேற்கொள்கின்றனர் என்பதையே இது காட்டுகின்றது.

இம்மாத ஆரம்பத்தில் இந்தச் சமாதான உடன்படிக்கைக்கு எதிர்ப்பு காட்டிவரும் ஹமாஸ் எனப்படும் பாலஸ்தீனிய தீவிரவாதக் குழுவின் முக்கிய தலைவர்கள் இருவர் இசுரேலிய இராணுவம் காஸாப் பகுதியில் மேற்கொண்ட பாரிய நடவடிக்கை ஒன்றில் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் நடந்து இரு வாரத்திற்கு இடையில் காஸாப் பகுதியில் இசுரேலியர் இருவர் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகளுக்கான பொறுப்பைசில பாலஸ்தீனியக் குழுக்கள் ஏற்றுள்ளன. இது சமாதான உடன்பாட்டிற்கு எதிரானது கெய்ரோவில் சந்தித்துப் பேச்சு நடத்திய இசுரேலிய பிரதமர் ரபீனும், பாலஸ்தீனிய தலைவர் யாசிர் அரபாத்தும் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதைக் கட்டுப்படுத்துவதற்கும், சமாதான முயற்சிகள் திசை திருப்பப்படுவதை தடுப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதில் இணக்கம் கண்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து பாலஸ்தீனியர்களுக்கும் இசுரேலுக்கும் இடையிலான அமைச்சரவை மட்ட உயர் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மூன்றுவார கால இசுரேலிய பாலஸ்தீனிய உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பாகநடவடிக்கை எடுக்க அதிகாரமளிக்கப்பட்டு இருக்கின்றது. இது தொடர்பில் வெளியிடப்பட்டிருக்கும் கூட்டறிக்கை ஒன்றில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியான பேச்சுக்களும் ஆரம்பித்துள்ளன. செங்கடல் பகுதியில் போக்குவரத்து நிலையை சுமுகமாக்கவும், இன்னும்இரு

**இசுரேலிய பாலஸ்தீனிய சமாதானப் பேச்சுகள் என்ற தலையங்கத்தின் கீழ் அகில இந்திய வானொலியை சேர்ந்த கே. கே. சூர் எழுதிய செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தின் மொழியாக்கம் இது.**

மாதங்களில் காஸாப் பகுதியிலிருந்து வெளியேற திட்டமிட்டிருக்கும் இசுரேலிய இராணுவத்தின் நடவடிக்கைகளை அவதானிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது இசுரேலிய படையினரின் வெளியேற்றம் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு பெரும் சவால்களை விடுக்கும் என்பதில் ஐயமில்லை ஒரு புறத்தில் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளைப் பேண வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டிய அதேசமயம், ஹமாஸ் போன்ற தீவிரவாதக் குழுக்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும் மற்றுமொரு புறத்தில், சில தினங்களுக்குள்ளாக இப் பகுதிகளின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கக் கூடிய நிர்வாக இயந்திரம் ஒன்றையும் தோற்றுவிக்க வேண்டி இருக்கின்றது. இத்தகைய ஒரு அமைப்பு பாலஸ்தீனியர்களிடம் இது வரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிவில் நடவடிக்கைகள், சுகாதாரம், கல்வி, வீதி அமைப்புக்கள், போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் இப் பகுதிகளில் உடனடியாக பொறுப்பேற்க வேண்டிய நிலையில் பாலஸ்தீனியர்கள் உள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் வேலை இல்லாமல் இப்பகுதியில் இருக்கின்றனர் என்பதும், இசுரேலினால் நீண்டகாலம் ஆளப்பட்டமையால் 'தாம் ஒதுக்கப்பட்டிருக்கின்றோம்' என்ற உணர்வலைகளுடன் இவர்கள் இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. எனினும் முழு உலகமுமே இசுரேலியபாலஸ்தீனியசமாதான உடன்படிக்கையின் அமுலாக்கத்திற்கு முழு ஆதரவும் தர முன்வந்திருப்பதும், இரண்டு பில்லியன் டாலர்கள் பணத்தை அடுத்த ஐந்து வருடங்களில் இப் பகுதியில் செலவிட அவை இணக்கம் தெரிவித்திருப்பதும் அதிர்ஷ்டகரமானதே. அதிலும் இசுரேல் 75 மில்லியன் டாலர்களை செலவிட முன் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீனியவிடுதலைஇயக்கமும், தலைவர் யாசிர் அரபாத்தும், நீண்ட நெடிய சுதந்திரப் போராட்டத்தின் மூலம் போராளிகளாக தம்மை இது காலவரை இனம் காட்டியுள்ளனர். இப்போது அவர்கள் ஏனைய நாடுகளின் தலைவர்களைப் போல அல்லது அவர்களுக்கு சமமானவர்களாக தாங்கள் சிறந்த நிர்வாகிகள் என்பதை நிரூபிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். தமது நாட்டின் அபிவிருத்திப் பணிகளை திட்டமிட்டு முன்னெடுத்துச்செல்லமுடியும் என்பதை அவர்கள் செயலில் காட்ட வேண்டியுள்ளது. பாலஸ்தீனிய மக்கள் தமக்கான அரசு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதன் நன்மைகளை அனுபவரீதியாக உணரும் போதுதான், துப்பாக்கிகளின் ஆட்சியிலிருந்து விடுபட முடியும் என்று பெரும்பாலான அவதானிகளும் கருதுகின்றனர்.

இந்த வேளையில் இசுரேலிய அரசும், பிரதமர் ரபீனும் யாசிர்அரபாத்தின் முயற்சிகளுக்கு முழு ஆதரவு கொடுத்து செயற்பட வேண்டியது அவசியமானதாகும். அதில் குறிப்பாக இசுரேலிய சிறைகளில் அடைபட்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களை விடுதலை செய்வதும், மேற்கு கரை எங்கிலும் இருந்து இசுரேலிய துருப்புக்களை மீளப் பெறுவதை துரிதப்படுத்துவதும், ஜெருசலேம் தொடர்பாக திருப்திகரமான தீர்வைக் காண்பதும் முக்கியமானதாகும்.

# எல்லாம் எமதுகைகளில்தான்

''எனது உயிரை அல்லது எனது மக்களின் உயிரைப் பறிக்க எவராவது முயற்சி செய்தால் நான் போராடுவேன்''

''என்னை அல்லது எனது மக்களை எவராவது அடிமை கொள்ள விளைந்தால் நான் போராடுவேன்''

இசுரவேலில் அமைதி வேண்டி உழைக்கும் ஒரு பிரமுகர் சில நாட்களுக்கு முன்னர் தனது உணர்வை ஒரு சஞ்சிகையில் எழுதியிருந்தார்.

இவை இன உணர்வும்-தன்மானமும் கொண்ட வாக்கியங்கள்.

''யாழ்தேவி நடவடிக்கைகளைப் போன்று பல இராணுவ நடவடிக்கைகளை தொடர்ச்சியாகநடாத்துவதன் மூலமே தமிழரின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்.''

இது சிங்கள இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவின் ''சமாதானமுயற்சி'' இந்தச் செய்தி நேற்றைய ஈழநாதம் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது.

திருவாளர் சிசில் அவர்களே! சமாதானம், அமைதி என்பவை தோற்கடிக்கப்பட்டபின் திணிக்கப்படுபவையல்ல சிசிலின் காட்டேறிப் படைகள் தமிழினத்திற்கு தர முயல்வது தீர்வல்ல. முடிவு காணவே முயற்சிக்கின்றது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க தேசத்தை வெள்ளையர்கள் ஆக்கிரமித்தபோது அதை எதிர்த்து போர் செய்த செவ்விந்தியமக்களின் கிளர்ச்சியைத்தீர்க்க வெள்ளையர்கள் செய்தது செவ்விந்தியர்களை அழித்ததுதான்.

அந்த இனத்தை இராணுவபலம் மூலம் அழித்துவிட்டு பிரச்சினையைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டி விட்டதாக சொன்னார்கள்.

இன்று, செவ்விந்தியர்களின் தாயகத்தில் செவ்விந்திய மக்கள் நூதனசாலைப் பொருட்களைப்போல இருந்து வருகின்றனர்.

அவுஸ்ரேலிய மண்ணின் விளைபொருளான 'அபரோஜின்' என அழைக்கப்படும் பழங்குடி மக்கள், திறந்தவெளி மிருகக் காட்சிச் சாலையைப் போல, ஒரு ஒதுக்குப்புறத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்கக் கண்டத்தின் பேறுடைச் செல்வமாகிய 'இன்கா', 'மாயா' நாகரிகங்கள் தவழ்ந்த மண்ணில்: ஸ்பானியர்களின் பீரங்கி வண்டிகள் உருண்டு முடிந்தபின்...

'இன்கா' இனமுமில்லை 'மாயா' இனமுமில்லை எல்லாமே ஸ்பானிய மயமாகி விட்டது.

எமது மண்மீதும் எத்தனையோ அன்னியன் புகுந்துதிரும்பிவிட்டான். ஆனாலும் உலகத்தின் மூத்தஇனங்களில் ஒன்றான தமிழன் இன்றும் தனித்துவத்துடன் வாழ்ந்துவருகின்றான்.

ஆனால் இப்போது எமது தாய்மண்மீது சிங்களவன் புக முயல்கின்றான்

அவன் புகுந்து முடிப்பானாகில்... தென் அமெரிக்கக்கண்டத்தில் நடந்ததை, செவ்விந்திய மக்கள் அனுபவித்ததை தமிழினத்திற்கு சிங்களவன் செய்வான்,

அன்றொருநாள்...

# ஐ.நா.வை ஆகரித்து செயற்படுவது அமெரிக்க நலனுக்கு நல்லது

மட்டும்தான்.

ஆனால், இவ்வாறாக கணிசமான தொகையினர் கொழும்பில் கைதாவதற்கு கொழும்பில் குறிப்பிடத்தக்க அளவில் தமிழர்கள் இருப்பதும் ஒரு காரணம் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் இதற்குப் பல காரணங்கள் உண்டு.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவு ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதன் விளைவு கொழும்பை அரசியல் நிர்வாக, பொருளாதார மையமாக்கியது. இதன்விளைவாக, கொழும்பில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் வாழவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. ஆயினும் தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சி கண்ட பின் அரசியல் மையம் வலுவிழந்து போய்விட்டதாயினும், நிர்வாக, பொருளாதார மையம் பெரிதாக மாற்றமடையவில்லை. இதனால் ஒரு பகுதியினர் தொடர்ந்தும் அங்கே வாழவேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகியது.

ஆனால், இன்று கொழும்பில் வாழ்பவர்களில் கணிசமான தொகையினர், தேசிய விடுதலை என்பதை விட சுகபோக வாழ்விற்காக அடிமைத் தனத்தை ஏற்க முற்படுபவர்கள். இவர்கள் சிறிலங்காவின் கொழும்பில் வாழ விரும்பவில்லை. இவர்கள் மேற்குலகில் நவீன அடிமைத்தனத்திற்கு இலக்கணமாக வாழ விரும்புகின்றார்கள். இவர்கள் அங்கு செல்வதற்கான ஒரு தரிப்பிடமாக கொழும்பில் தங்கியுள்ளனர். வசதி கிடைத்ததும் அவர்கள் வெளியேறிவிடுவார்கள். வெளியேறிக்கொண்டும் உள்ளனர்.

இதனை இன்று உலகமே ஏற்றுக்கொண்டுள்ளது. அதாவது, இலங்கையில் சிறுபான்மை தமிழ் தேசிய இனம் தனது உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றது என்பதை இந் நிலையில் இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லை என சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கூறிக்கொள்வது தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள உதவுமே ஒழிய ஒருபோதும் உலகம் ஏமாறப் போவதில்லை.

இந்நிலையில், கொழும்பில் தங்கியிருப்பவர்களை சிறிலங்கா அரசாங்கத்தின் விருந்தோம்பலின் பூரிப்பில் தங்கியிருப்பவர்களாக சிறிலங்கா அரசாங்கம் கூறிக் கொள்வது ஏற்புடையதொன்றல்ல. அதேவேளை, தென்னிலங்கையில், சிங்களப் பேரினவாதத்திடம் அற்பசொற்ப சலுகைகளைப் பெற்று வாழ்ந்து விட எண்ணும் சிறு கூட்டமும் உண்டு. ஆனால், அவர்கள் சிறிலங்கா ஜனாதிபதி கூறிக் கொள்வது போன்று பெரும் எண்ணிக்கையானோர் அல்ல. அவர்கள் தமது சுகவாழ்விற்காக இனத்தை காட்டிக் கொடுக்க தயாராக உள்ளவர்கள். சிங்கள அரசிற்குச் சேவகம் செய்ய தயாராக உள்ள அடிமைகள்.

இவ்வாறானதொரு நிலையில் தமிழர்களுக்குப் பிரச்சினை இல்லை அவர்களில் கணிசமானோர் எம்முடனே உள்ளனர் என சிறிலங்கா அரசு சாதிக்க முற்படுவது அற்பத்தனமாகும். இன்று காஷ்மீரை விட இந்தியாவின் ஏனைய பகுதிகளில் அனேக முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள் என்பதினால் காஷ்மீர் முஸ்லிம்களுக்கு பிரச்சினை என்பதே இல்லை எனக் கூறுவதற்கு ஒப்பானது ஆகும். மேலும் உலகில் முஸ்லிம் சனத் தொகையில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளதால் முஸ்லிம்களின் குரலாக இந்தியா இருக்கின்றதுஎனக் கூறமுற்படுவதற்குச் சமனானதாகும்.

மேலும் இன்றுள்ள பிரச்சினை தென்னிலங்கையில் குடியேறிவிட்ட தமிழருக்கும் சிறிலங்கா அரசிற்கும் உடையதல்ல. அதாவது அடிமைகளாக வாழ்வதற்கு சம்மதித்துவிட்டவர்களும் எஜமானர்களுக்குமான பிரச்சினையல்ல, இது அடிமைத்தனத்தை எதிர்த்து சுதந்திரமாக வாழ முற்படுபவர்களுக்கும் - எஜமானத்தனம் பண்ண முற்படுபவர்களுக்குமான பிரச்சினையாகும்.

---

ரோவில் சந்தித்துப் பேச்சு நடத்திய இசுரேலிய பிரதமர் ரபீனும், பாலஸ்தீனிய தலைவர் யாசிர் அரபாத்தும் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதைக் கட்டுப்படுத்துவதற்கும், சமாதான முயற்சிகள் திசை திருப்பப்படுவதை தடுப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் இணக்கம் கண்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து பாலஸ்தீனியர்களுக்கும் இசுரேலுக்கும் இடையிலான அமைச்சரவை மட்ட உயர் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மூன்றுவார கால இசுரேலிய பாலஸ்தீனிய உடன்படிக்கையின் அமுலாக்

சிவில் நடவடிக்கைகள், இல் ஐயமில்லை ஒரு புறத்தில் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளைப் பேண வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டிய அதேசமயம், ஹமாஸ் போன்ற தீவிரவாதக் குழுக்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும் மற்றுமொரு புறத்தில், சில தினங்களுக்குள்ளாக இப் பகுதிகளின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கக் கூடிய நிர்வாக இயந்திரம் ஒன்றையும் தோற்றுவிக்க வேண்டி இருக்கின்றது. இத்தகைய ஒரு அமைப்பு பாலஸ்தீனியர்களிடம் இது வரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தாங்கள் சிறந்த நிர்வாகிகள் என்பதை நிருபிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். தமது நாட்டின் அபிவிருத்திப் பணிகளை திட்டமிட்டு முன்னெடுத்துச்செல்லமுடியும் என்பதை அவர்கள் செயலில் காட்ட வேண்டியுள்ளது. பாலஸ்தீனிய மக்கள் தமக்கான அரசு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதன் நன்மைகளை அனுபவரீதியாக உணரும் போதுதான், துப்பாக்கிகளின் ஆட்சியிலிருந்து விடுபட முடியும் என்று பெரும்பாலான அவதானிகளும் கருதுகின்றனர்.

இந்த வேளையில் இசுரேலிய அரசும், பிரதமர் ரபீ

---

# ஐ.நாவை ஆதரித்து செயற்படுவது அமெரிக்க நலனுக்கு நல்லது

## ஐ. நா. பொதுச்செயலர்

உலகின் பொலிஸ்காரனாக அமெரிக்கா தனித்து செயற்பட விரும்பினாலொழிய ஐ. நாவை அது ஆதரித்துச் செயற்படுவதே அமெரிக்காவின் நலன்களுக்கு ஏற்றதாக இருக்கும். இவ்வாறு ஐ நா. பொதுச்செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ்காலி கூறியுள்ளார்.

சோமாலியாவில் ஐ. நா. வின் நடவடிக்கைகளை அமெரிக்கா கண்டித்திருப்பதற்கு பதில் கூறும் வகையில், ஐ. நா பொதுச்செயலாளர் பூட்டர்ஸ்காலி மேலும் கூறுகையில்,

அமெரிக்காஉலகப் பொலிஸ் காரனாக செயற்படுவதை அங்கத்துவ நாடுகள் விரும்பாது விடின் அவைகளுக்கு ஐ. நாவைத் தவிர வேறு வழியில்லை எனவும்,

மார்ச் 31ஆம்திகதி சோமாலியாவிலிருந்து வாபஸ்பெற விருப்பதாக அமெரிக்கா அறிவித்திருப்பது குறித்து கவலையடைந்திருப்பதாகவும் தெரிவித்தார் இதேவேளை அமெரிக்காவின் சமாதான முயற்சிகளுக்கு மத்தியிலும், சோமாலிய யுத்தத் தலைவர் அய்டீட்டை கைது செய்யக் கோரும் பிடியாணை இன்னமும் அமுலில் இருப்பதாக ஐ. நா. உதவிப் பொதுச் செயலர் அலன் தெரிவித்துள்ளார்.

## ஈரானுக்கு எதிராக கிளர்ந்தெழ சல்மான் ருஷ்டி கோரிக்கை

(ஒஸ்லோ)

ஈரானுக்கு எதிராககிளர்ந்து எழுமாறு சர்ச்சைக்குரிய பிரிட்டன் நாவலாசிரியர் சல்மான் ருஷ்டி உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார். சாத்தானின் வசனங்கள் என்ற பிரபலமான நூலின் ஆசிரியரான அவர் நோர்வேயின் என். ஆர். கே. தொலைக் காட்சிக்கு பேட்டியளித்த போது மேலும் கூறுகையில்,

சாத்தானின் வசனங்கள் என்ற நூலை நோர்வே மொழியில் மொழிமாற்றம் செய்து பிரசுரிக்க முனைந்த பிரசுரிப்பாளர் விலியம் நைகாட் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாக தமது கண்டனத்தையும் தெரிவித்தார்.

இச் சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்பது ஊர்ஜிதப் படுத்தப்படாத போதும் இதனுடன் தெகிரானுக்கு தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் ஈரானுக்கு எதிராக அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்கோரினார். அத்துடன் நைகாட்டின் மீதான கொலை முயற்சிக்கு ஈரானே பொறுப்பாளி என்பதில் சந்தேகமில்லை எனவும், உண்மை உறுதிப்படுத்தப்பட்டால் நோர்வே, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க நாடுகள் மற்றும் கிழக்கு நாடுகள் அனைத்தும் ஈரானுக்கு எதிராக கிளர்ந்து எழ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

யப்பான் மொழிக்கு சாத்தானின் வசனங்களை மொழிமாற்றம் செய்த ஹிட்டொஷி இசாரா ஹிஷி 1991-ல்குத்திக் கொல்லப்பட்டதையும் சல்மான்ருஷ்டிசுட்டிக்காட்டினார்

## நெல்சன் மண்டேலாவிற்கு சமாதான நோபல் பரிசு

[லண்டன்]

ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா மற்றும் தென் ஆபிரிக்க அதிபர் டி. கிளார்க்கும்1993 ஆம் ஆண்டிற்கான நோபல் சமாதானப் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதனை நோபல் பரிசுக் குழு நேற்று முன்தினம்அறிவித்தது.

தென்ஆபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு எதிராகக் கடைப் பிடிக்கப்பட்ட இன பேதக் கொள்கையை எதிர்த்துப் போராடி, இன சார்பற்ற ஜனநாயகத்தை உருவாக்க இவ்விரு தலைவர்களும் எடுத்து வரும் முயற்சிகளுக்காக இவர்களுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப் படவிருப்பதாக நோபல் பரிசுக் குழு தெரியப்படுத்தியுள்ளது.

### பிரதமருடன் சந்திப்பு

தமிழக நல்லாட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் தமிழக முன்னாள் அமைச்சர்களுமான க. இராசாராம், வி. வி. சுவாமிநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்து தமிழக அரசு பற்றிய புகார் மனுவொன்றைக் கையளித்தனர்.

### மாபியா தொடர்பு

குற்றவாளிகள் நிறைந்த வல்லரசாக ரஷ்யா வேகமாக வளர்ச்சி பெற்றுவருகிறது என்றும் இத்தாலியின் முக்கிய மாபியா குழுக்களுக்கும் ரஷ்ய குற்றவாளிக் கும்பல்களுக்கும் இடையே புதிய தொடர்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் இத்தாலிய குற்றவியல் நிபுணர் தெரிவித்துள்ளார்.

---

அந்த இனத்தை இராணுவபலம் மூலம் அழித்துவிட்டு பிரச்சினையைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டி விட்டதாக சொன்னார்கள்.

இன்று, செவ்விந்தியர்களின் தாயகத்தில் செவ்விந்திய மக்கள் நூதனசாலைப் பொருட்களைப்போல இருந்து வருகின்றனர்.

அவுஸ்ரேலிய மண்ணின் விளைபொருளான 'அபரோஜின்' என அழைக்கப்படும் பழங்குடி மக்கள், திறந்தவெளி மிருகக் காட்சிச் சாலையைப் போல, ஒரு ஒதுக்குப்புறத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்கக் கண்டத்தின் பேறுடைச் செல்வமாகிய 'இன்கா', 'மாயா' நாகரிகங்கள் தவழ்ந்த மண்ணில்: ஸ்பானியர்களின் பீரங்கி வண்டிகள் உருண்டு முடிந்தபின்...

'இன்கா' இனமுமில்லை 'மாயா' இனமுமில்லை எல்லாமே ஸ்பானிய மயமாகி விட்டது.

எமது மண்மீதும் எத்தனையோ அன்னியன் புகுந்துதிரும்பிவிட்டான். ஆனாலும் உலகத்தின் மூத்தஇனங்களில் ஒன்றான தமிழன் இன்றும் தனித்துவத்துடன் வாழ்ந்துவருகின்றான்.

ஆனால் இப்போது எமது தாய்மண்மீது சிங்களவன் புக முயல்கின்றான்

அவன் புகுந்து முடிப்பானாகில்... தென் அமெரிக்கக்கண்டத்தில் நடந்ததை, செவ்விந்திய மக்கள் அனுபவித்ததை தமிழினத்திற்கு இங்களவன் செய்வான்,

அன்றொருநாள்...

யாழ்ப்பாணக் கடனீரேரி கரையில் தப்புத்தண்ணிக்குள் போர்த்துக்கேயன் கால்வைத்து நடந்தபோது சில நூற்றுக் கணக்கான கால்களே இருந்தன. ஆனாலும் அந்தக் கால்களுக்குச் சொந்தமான கைகள் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் பிடித்திருந்தன.

பல நூற்றுக்கணக்கில் சங்கிலியன் படை வாளுடன் நின்ற பொழுதிலும் சில நூறு துப்பாக்கி பிடித்த போர்த்துக்கேயர் படையிடம் தோற்றுப் போனது-

இது அன்றைய வரலாறு.

இன்று, பிரபாகரன் என்ற பெருந்தலைவர் உறுதி என்ற கவசத்தையும் துணிவு என்ற ஆயுதத்தையும் எமது இளம் சந்ததிக்கு வழங்கி அவர்களை ஆகர்சித்து நிற்கின்றார்.

அந்த வரலாற்று மனிதனின் வழி நடாத்தலில் ஆயிரம் ஆயிரம் புலிவீரர்கள் ஆயுதபாணிகளாக எதிரியைஅழிக்கஆர்த்தெழுந்தபடியுள்ளனர்.

எமது இனத்திடம் அறிவு என்ற கவசமுண்டு.

அக் கவசம் போராட்டத்தின் கேடயமாக மாறவேண்டும்-

அத்துடன் எம்மிடம் ஆயுத பலமுமுண்டு-

எதிரியின் ஆயுதத்தையும் கைப்பற்றி எமதாக்கும்வீரமும், செயலும் உண்டு.

ஆனாலும் எதிரியின் சேனைக்கு நிகரான ஆட்பலம் தான் தமிழர் படையிடம் இல்லை.

இந்த ஆட்பலத்தை உடனடியாகவே நாம் தேடிக் கொள்ள வேண்டும்.

புலிகளின் சேனையில் போய் இணைய வேண்டும்-

இல்லாவிட்டால்...

இன்னும் சில மாதங்களில்.

1974 ஜன. 9 தமிழராட்சி மாநாட்டில் நடந்தது நடக்கும்.

1979 பிரிகேடியர் வீரதுங்கா வந்ததன் பின் நடந்தது நடக்கும்.

1981 யாழ் நூல்நிலையம் எரிந்தது போல எல்லாம் எரியும்.

1983 யூலை 24 பண்டத்தரிப்பில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டது போல நடக்கும்.

1984 வல்வெட்டித்துறை வாசிகசாலைக்குள் இளைஞர்களை அடைத்து குண்டு வைத்தது போல நடக்கும்.

இறுதியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலையில் இன்று நடப்பது நடக்கும்.

மேலும் சில வருடங்கள் சென்ற பின்...

உயிரோடிருக்கும் தமிழர்கள் எல்லோரது பெயர்களும்... 'பண்டா' என்று முடியும்.

தமிழர்களின் ஊர்களெல்லாம்... 'கம' அல்லது... 'புர' என்று முடியும்.

இதை வீரமும் மானமும், உள்ள இளம்பரம்பரை அனுமதிக்கப்போகின்றதா!

எல்லாம் எம் கையில்தான்.

# ஈழநாதம்

# பிரச்சினைக்கு காலம் தாழ்த்தாது நிரந்தர தீர்வு காண்போம்

## - டி.பி. விஜேதுங்க

(கொழும்பு)
''காலம்தாழ்த்தாது வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றையே காண்போம். இதில் நாம் எந்த மாற்றமும்செய்யமாட்டோம். காலம் தாழ்த்த தாழ்த்த பயங்கரவாதிகளின் கையோங்கிச் செல்கின்றது'' என சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க தெரிவித்துள்ளார்

மாவனெல்ல மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் மேற்படிகருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் ''இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. அதில் யாருடைய தலையீடும் இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் சுதந்திரமாக இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய ஆட்சியாளராகியநாம் தயாராகவுள்ளோம்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வைநோக்கி நாம் செல்லும்போது அது பல கசப்பான சம்பவங்களை எமக்கு தரும். ஆதனால் நாம் பின்னடையவோ அல்லது பதற்றமடையவோ கூடாது'' இவ்வாறான நிலையில் அது நாட்டிற்கும் இனத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும். எனவே உங்கள் ஒத்துழைப்பே எமக்கு தேவை.

வடக்கு கிழக்கில் பல இன்னல்களுக்கு மத்தியிலே நமது இராணுவத்தினர் தமது உயிர்களை தியாகம் செய்கின்றார்கள். அதனால் தான் நாம் இன்று சுதந்திரமாக இயங்கக்கூடியதாகஉள்ளது''என்றார்.

## சனசமூகநிலைய நிர்வாகிகள் இரு நாள் பயிற்சி வகுப்பு

(தென்மராட்சி)
பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கான பயிற்சி வகுப்புகளும், கருத்தரங்குகளும் இருநாட்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நூலக மண்டபத்தில் நடைபெற்றது. 1ஆம் நாள் அமர்வுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் திரு. ந. பாலச்சந்திரன் தலைமையிலும் 2ஆம் நாள் அமர்வு பளை மகாவித்தியாலய பிரதி அதிபர் தலைமையிலும் இடம்பெற்றது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாவர் திரு சுந்தரம் டிவகலாலா அவர்களும், பளை பிரதேச செயலாளர் திரு. சி. ஐயாத்துரை அவர்களும், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கி. வி. கிருஷ்ணசாமி அவர்களும், பளை வட்டப் பொறுப்பாளர் திரு. அன்பு அவர்களும் கலந்து கொண்டனர். (86)

## கொழும்பு கடற்பரப்பில் கடற் கொள்ளையர்கள்

(கொழும்பு)
கொழும்புக்கு மேற்காக உள்ள கடற்பரப்பில் கடற் கொள்ளைக்காரரின் தொல்லை அதிகரித்திருப்பதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்த முப்பது கடற் கொள்ளைக்காரர்களுக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதத்துக்கு இடையிலேயே இந்த முப்பதுபேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் இடம் கிடைக்கும்வரை கொழும்பு நகருக்கு மேற்காக உள்ள கடற்பரப்பில் நங்கூரமிட்டிருக்கும் கப்பல்களிலேயே இவர்கள் திருடுவதாகக் கூறப்படுகிறது. இவர்கள் வசம் ஆயுதங்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நங்கூரக் கயிறுகள் மூலமே இவர்கள் கப்பல்களில் ஏறி திருடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பணம் பறிக்கும் முயற்சியில் ரயில்வே ஊழியர்கள்

(வவுனியா)
வவுனியாவில் இரவு ரயிலில் சோதனை என்ற பெயரில் அடையாள அட்டைகளைப் பெற்றுவிட்டு, பின்னர் அவற்றைத் திருப்பிக்கொடுப்பதற்கு பணம் பறிக்க ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் முயற்சித்ததாக கூறப்படும் தகவல்களை அடுத்து ரயில்வே அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் பயணிகள் இருவர் தமது அடையாள அட்டையை பறிகொடுத்துள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டது

## கோட்ட தொழிலாளரிடம்

## மாத்தளைப் பகுதியில் தமிழர் பலர் கைது

(மாத்தளை)
மாத்தளைப் பகுதி இரவு வேளைகளில் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

கடந்த சில தினங்களாக சிறிலங்கா இராணுவத்தினர் இத்தகைய தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிமாவட்டங்களில் தங்கியிருந்த பலர் அங்கிருந்து தப்பி மாத்தளைப்பகுதியில் வந்து பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்தே இச் சோதனையை தாம் மேற்கொண்டு வருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் குறிப்பிட்ட சில வீடுகளைத் திடீரென முற்றுகையிடும் பொலிசார் சந்தேகத்திற்கிடமான

## நீர்கொழும்பில் இருவர் சடலம்

(கொழும்பு)
நீர்கொழும்பு பகுதியில்அண்மையில் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட இருவரில் ஒருவர் பொலிசாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தெமட்ட கொடகாளிமுத்து பிள்ளை தோட்டத்தைச்சேர்ந்த ரவி என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் எனவும் இவர் முன்னர் இயக்க மொன்றின் உறுப்பினராக இருந்தவர் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவருடன் கொலை செய்யப்பட்ட மற்றைய நபர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது இதேவேளை இக்கொலைகளுக்கான காரணங்களோ, கொலையாளிகள் பற்றிய விபரங்களோ பொலிசாருக்கு கிடைக்கவில்லையாம்.

# இளைஞர்களின் ஜேர்மன் பயணம் விமானப் பணிப் பெண்ணால் தடை

[கொழும்பு]
ஜேர்மனி செல்வதற்காக விசா உட்பட தமது ஆவணங்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்த இரு தமிழ் இளைஞர்கள் தமது பயணத்தைத் தொடர முடியாது சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

விமான நிலையத்தினுள் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் இந்த இரு இளைஞர்களினதும் ஆவணங்களை பரிசோதித்து உள்ளே செல்ல அனுமதித்தனர். தொடர்ந்து இவர்கள் இருவரும் பயணிகள் பொதிகள் சோதனை செய்யும் இடத்துக்கு சென்றபோது அப்பகுதிக்கு அவசர அவசரமாக ஓடிவந்த எயர்லங்கா விமானப் பணிப்பெண் ஒருவர் இவர்களின் பயணப் பொதிகளை சோதனையிட்டார். அது அவரது கடமை இல்லாத போதிலும் இரு இளைஞர்களும் ஏதும் பேசாது நின்றனர்.

பின்னர் அப் பணிப்பெண் இளைஞர்களிடம் கடவுச்சீட்டுகளை காட்டுமாறு கோரினார். இளைஞர்கள் அதனை அவரிடம் கொடுத்தனர். பெயர்களையும் கேட்ட போது பெயரையும் தெளிவாக இளைஞர்கள் கூறினர் கடவுச்சீட்டில் உள்ளது போல் கையொப்பம் இடுமாறு அந்த விமானப் பணிப்பெண் கேட்கவே இளைஞர்களும் அவ்வாறே கையெழுத்திட்டனர். அப்பெண் இரு கடவுச்சீட்டுகளையும் எடுத்துக்கொண்டு வேறு இடத்திற்குச் சென்றார்.

சில மணி நேரத்தின் பின் திரும்பிவந்த அப்பணிப்பெண் இளைஞர்களிடம் அடையாள அட்டையை காட்டுமாறு கூறினார். வெளிநாடு செல்வதாலும் கடவுச்சீட்டு இருப்பதாலும் அடையாள அட்டையை கொண்டுவரவில்லை என இளைஞர்கள் கூறினர். 'கடவுச் சீட்டுகள் கிழிக்கப்பட்டிருக்கின்றதே, களவாக விசா எடுக்கப்பட்ட கடவுச்சீட்டுகளா?'' என அப்பெண் இரு இளைஞர்களையும் கேள்வி மேல் கேள்வி கேட்டார் அதற்கு இளைஞர்கள் 'நாம் உங்களிடம் கடவுச்சீட்டைத் தந்தபோது அவை நல்ல நிலையிலேயே இருந்தன. இப்போது எவ்வாறு கடவுச்சீட்டுகள் கிழிக்கப்பட்டுள்ளனஎன்பது எமக்கு தெரியாது. இது கிழிக்கப்பட்டிருந்தால் முன்பு அதை நீங்கள் பரிசோதித்த போது [illegible] கேட்டிருக்க [illegible] கடவுச்சீட்டை கொண்டுபோய் திரும்பிய போதே அவை கிழிக்கப்பட்டுள்ளன'' என கூறினர்.

இரு இளைஞர்களையும் அப் பணிப்பெண் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் கூட்டிச்சென்றார் இளைஞர்கள் நடந்தவற்றை அந்த அதிகாரிகளுக்கு கூறினர். உண்மை நிலையை அறிந்து கொண்ட அதிகாரி மேலதிக விசாரணைக்காக அவ்விளைஞர்களை தடுத்துவைத்தார். இளைஞர்கள் தமது பரிதாப நிலையை தம் ஏஜன்ஸிக்கு கூறியதையடுத்து அவர்கள் உடனடியாக செயற்பட்டு இருவரையும் மீட்டனர்.

# காங்கிரஸ் உடன் இணைய ஜெயலலிதா முயற்சி

(சென்னை)
தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இன்று டில்லி செல்வது முறிந்து போன அ. தி. மு க. காங்கிரஸ் உறவை மீண்டும் புதுப்பிக்கவே எனத் தெரிவிக்கப்படுகிறது. இதே சமயம் அ.தி.மு.க,காங்கிரஸ் உறவை புதுப்பிக்க முயற்சிகள் நடப்பதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் ஒப்புக்கொண்டுள்ளார்

காங்கிரஸ்கட்சி, ஜெயலலிதா இல்லாத அ. தி. மு கவை ஏற்கும் என வாழப்பாடி கூறியுள்ளார் உறவு புதுப்பிக்கும் முயற்சியை ஆரம்பித்தது அ.தி.மு.க தான் காங்கிரஸ் அல்ல என்றும் அவர்கூறினார். இதுவரை காங்கிரசை கடுமையாக தாக்கிப் பேசிய தனது அமைச்சர்களை நிதானமாக நடக்கும்படி ஜெயலலிதா கேட்டுள்ளார். ஜெயலலிதாவையும் அவரின் ஆட்சியையும் கண்டிப்பதை காங்கிரசும் நிறுத்தி வைத்துள்ளது என சுட்டிக்காட்டப்படுகிறது.

## சனசமூக நிலையம் திறப்பு

மணலாற்று சமரில் வீரச்சாவு அடைந்த மாவீரன் கப்டன் - விக்ரம் அவர்களின் ஞாபகார்த்தமாக இன்று மாலை 5.00 மணிக்கு கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் கப்டன் விக்ரம் சனசமூக நிலையம் ஒன்று பொதுமக்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. (86)

# இந்திய இராணுவத்தால் பள்ளிவாசல் முற்றுகை

## கைவிடுமாறு பாகிஸ்தான் கோரிக்கை

(டில்லி)
காஷ்மீர் தீவிரவாதிகள் ஒளித்திருப்பதாகக்கூறப்படும் இப்பகுதியில் உள்ள பிரபல பள்ளிவாசல் ஒன்றை இந்தியப்படைகள்சுற்றிவளைத்துள்ளன. பள்ளி வாசலினுள் நுழையும் திட்டம்தமக்கில்லை எனவும் உள்ளே இருக்கும் தீவிரவாதிகளை சரணடையுமாறு தாம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருவதாகவும் இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே காஷ்மீர் முஸ்லிம்களின் புனிதமான பிரதேசம் என்று கூறப்படும் இப்பிரதேசத்தை முற்றுகையிடுவதை கைவிடுமாறு பாகிஸ்தான் இந்தியாவைக்கோரியுள்

## ஊர்வலத்தின் போது கலகம் 19 பொலிசார் உட்பட 80 பேர் காயம்

(இலண்டன்)
இனவாதக்குக்கு எதிரான [illegible] கள் செங்கற்கள் மற்றும் பொருள்களை வீசித் தாக்கிய

ளால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. (86)

நிறுத்தி வைத்துள்ளது என சுட்டிக்காட்டப்படுகிறது.

உடனடியாக செயற்பட்டு இருவரையும் மீட்டனர்.

(கொழும்பு)

கொழும்புக்கு மேற்காக உள்ள கடற்பரப்பில் கடற் கொள்ளைக்காரரின் தொல்லை அதிகரித்திருப்பதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்த முப்பது கடற் கொள்ளைக்காரர்களுக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதத்துக்கு இடையிலேயே இந்த முப்பதுபேரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் இடம் கிடைக்கும்வரை கொழும்பு நகருக்கு மேற்காக உள்ள கடற்பரப்பில் நங்கூரமிட்டிருக்கும் கப்பல்களிலேயே இவர்கள் திருடுவதாகக் கூறப் படுகிறது. இவர்கள் வசம் ஆயுதங்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நங்கூரக் கயிறுகள் மூலமே இவர்கள் கப்பல்களில் ஏறி திருடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பணம் பறிக்கும் முயற்சியில் ரயில்வே ஊழியர்கள்

(வவுனியா)

வவுனியாவில் இரவு ரயிலில் சோதனை என்ற பெயரில் அடையாள அட்டைகளைப் பெற்றுவிட்டு, பின்னர் அவற்றைத் திருப்பிக்கொடுப்பதற்கு பணம் பறிக்க ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் முயற்சித்ததாக கூறப்படும் தகவல்களை அடுத்து ரயில்வே அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் பயணிகள் இருவர் தமது அடையாள அட்டையை பறிகொடுத்துள்ளனர் என்றுதெரிவிக்கப்பட்டது

## தோட்ட தொழிலாளரிடம் நிர்வாகம் கெடுபிடி

ஒரு தொழிலாளி நாள் ஒன்றிற்கு 24 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்து பறிக்க வேண்டும். இல்லையேல் வேலை வழங்கப்படமாட்டாது என பதுளையில் உள்ள ஒரு தோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தொழிலாளர் இது சம்பந்தமாக தொழிற் சங்கம் ஒன்றிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

புதிய நிபந்தனையால் சுமார் 500 தொழிலாளர் பாதிப்படைந்துள்ளனர். வழமையாகவே தொழிலாளி ஒருவர் நாளொன்றிற்கு 15 கிலோ தேயிலைக் கொழுந்து பறித்தாலே போதும் என்றிருந்தது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலைப் படை அங்கி தொடர்பாக

## முன்னாள் தமிழ் பொலிஸ் தேடப்படுகிறாராம்

(கொழும்பு)

முகத்துவாரம் கடற்கரையில் கடந்த வாரம் 'கண்டெடுக்கப்பட்' தற்கொலைப்படை வீரரின் குண்டுகள் பொருத்தப்பட்ட அங்கி தொடர்பாக முன்னாள் தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தேடப் பட்டு வருகிறார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த முத்துக்குமார் மகேந்திரன் என்பவரே குற்றப்புலனாய்வு பணியகத்தினால் தேடப்பட்டு வருபவராவர்.

## மாத்தளைப் பகுதியில் தமிழர் பலர் கைது

(மாத்தளை)

மாத்தளைப் பகுதி இரவு வேளைகளில் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

கடந்த சில தினங்களாக சிறிலங்கா இராணுவத்தினர் இத்தகைய தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிமாவட்டங்களில் தங்கியிருந்த பலர் அங்கிருந்து தப்பி மாத்தளைப்பகுதியில் வந்து பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்தே இச் சோதனையை தாம் மேற்கொண்டு வருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் குறிப்பிட்ட சில வீடுகளைத் திடீரென முற்றுகையிடும் பொலிசார் சந்தேகத்திற்கிடமானவர்களையும் விசாரித்து வருகின்றனர்.

கடந்த வெள்ளியன்று மாத்தளைப்பகுதியில் உள்ள கருதாவளைப்பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது, இதன் போது கைதான 12 தமிழ் இளைஞர்கள் இப்போதும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மாத்தளைப்பகுதியில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளோரை உடனடியாக தமது பெயர் விபரங்களை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு பொலிசார் கேட்டுள்ளனர் இவ்வாறு பதிவு செய்து கொள்ளுமிடத்து வீணான அசௌகரியங்களிலிருந்து தப்பிக் கொள்ளலாம் எனவும் பொலிசார் அறிவுறுத்தியுள்ளனர்.

## வெடிக்காத ஷெல்கள்

யாழ்தேவி ராணுவ நடவடிக்கையின்போது பூநகரி, ஆனையிறவு இராணுவ முகாம்களிலிருந்து கெற்பலி, கச்சாய் பகுதி நோக்கி ஏவப்பட்ட சில எறிகணைகள் வெடிக்காத நிலையில் அப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தோட்டங்கள், பற்றைகளில் மேலும் எறிகணைகள் வெடிக்காத நிலையில் மறைந்திருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது. (86)

யுத்தக்கைதி

தாகவும் இதன்மூலம் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடியும் என தான் நம்புவதாகவும் தெரிவித்த அவ் அதிகாரி இவர்களின் விடுதலை தொடர்பான முயற்சிகளை தாம் கைவிடவில்லை எனவும் தெரிவித்தார்.

சிங்கள

சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டனர். டி. எஸ் சேனநாயக்கா சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தியிருந்தார். ஆனால் இன்று நிலைமைவேறு. இன்று வடக்கு கிழக்கு யுத்தத்தில் எமது இனத்தவர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள் இன்று நாம் எமது சிங்கள சுயநிர்ணயத்தை மறந்து விட்டோம். இதேநிலை தொடர்ந்தால் ஒரு காலத்தில் இந்த நாட்டில் சிங்கள இனம் ஒன்று இருந்ததாக மட்டுமே சரித்திரம் சொல்லும். இந்த நிலை ஏற்படுவதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

எமது நாட்டில் இன்று தேசிய இன வீரர்கள் குறைந்து வருகின்றனர். எனவே நாம் அனைவரும் ஒன்றிரண்டு எமது நாட்டிற்கும் சிங்கள இனத்திற்கும் ஏற்பட்டு வரும் அழிவைத் தடுக்கவேண்டும்.

டென்சில் கொப்பேக்கடுவ போராடியதும் தனது உயிரைக் கொடுத்ததும் தனது அரசியல் கட்சிக்காகவோ அல்லது தனது பரம்பரையினருக்காகவோ அல்ல. சிங்கள தேசிய இனத்திற்காகவே அவர் தன்னை அர்ப்பணித்தார்.

அன்று துட்டகைமுனு அரசன் எல்லாளனைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால் இன்றுள்ள அரசாங்கங்கள் இதுபோன்ற தீர்மானங்களிற்கு வருவதற்குத் தயங்குகின்றன. இன்று சிங்களத் தாயின் பிள்ளைகள் வெறுமனே சிங்களவன் என்ற காரணத்திற்காக வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டு வருகிறார்கள். எனவே இனியும் சிங்கள மக்கள் தூங்கிக்கொண்டிருக்காமல் தூக்கத்தை துறந்து விட்டு சிங்கள தேசிய இனத்தை அழிவில் இருந்து காப்பாற்றுவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

# இந்திய இராணுவத்தால் பள்ளிவாசல் முற்றுகை

## கைவிடுமாறு பாகிஸ்தான் கோரிக்கை

(டில்லி)

காஷ்மீர் தீவிரவாதிகள் ஒளித்திருப்பதாகக்கூறப்படும் இப்பகுதியில் உள்ள பிரபல பள்ளிவாசல் ஒன்றை இந்தியப்படைகள்சுற்றிவளைத்துள்ளன. பள்ளி வாசலினுள் நுழையும் திட்டம்தமக்கில்லை எனவும் உள்ளே இருக்கும் தீவிரவாதிகளை சரணடையுமாறு தாம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருவதாகவும் இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே காஷ்மீர் முஸ்லிம்களின் புனிதமான பிரதேசம் என்று கூறப்படும் இப்பிரதேசத்தை முற்றுகையிடுவதை கைவிடுமாறு பாகிஸ்தான் இந்தியாவைக்கோரியுள்ளது.

## ஊர்வலத்தின் போது கலகம் 19 பொலிசார் உட்பட 80 பேர் காயம்

(இலண்டன்)

இனவாதத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றைத் தடுக்க முற்பட்ட பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே இடம்பெற்ற கலகத்தில் பத்தொன்பது பொலிசார் உட்பட எண்பதுக்குமதிகமானோர் காயமுற்றனர். இலண்டனில் வட கிழக்கு பகுதியில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது சுமார் இருபதாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தை பொலிசார் தடுக்க முற்பட்ட போது ஆர்ப்பாட்டக்காரர்கள் செங்கற்கள் மற்றும் பொருள்களை வீசித் தாக்கியதால் கலவரம் மூண்டதாகக் கூறப்படுகிறது.

மக்கள்

டும். எனவே வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு மக்களின் கையில்தான் உள்ளது. எனவே மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைக்க வேண்டும் என்றார்

## இலவசக் கல்வித் திட்டம் கைவிடப்பட்டு வருகிறது

(கொழும்பு)

கலாநிதி கன்னங்கராவின் இலவசக் கல்வித் திட்டத்தில் இப்போது பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சுமதிபாலா ஜெயவர்தனா தெரிவித்தார்.

மாநகர சபைக் கூட்டத்தில் பேசும் போது அவர், ஏழைகளுக்கும் கெட்டிக்கார மாணவர்களுக்கும் உதவும் வகையில் கன்னங்கரா இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்தார். 1977க்குப் பிறகு யு. என். பி. ஆட்சியில் இலவசக் கல்வித் திட்டம் சிதைந்து போகிறது என்றார்.

எறிக் சந்திரசேனா பேசுகையில், கொழும்பில் உள்ள பிரபல்யமான கல்லூரிகள் இரத்தினபுரியில் உள்ள பிள்ளைகளைக்கூட அனுமதிக்கிறார்கள் ஆனால் அயலில் உள்ள ஏழைப் பிள்ளைகளுக்கு இக் கல்லூரிகள் கதவை அடைத்து விடுகின்றன என்றார்

பாடசாலைகள் ஏழைப் பிள்ளைகளை அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சரைக் கேட்டு கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 17-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11263

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

41-9876, 26-7949, 41-9480, 26 9764, 26-3654
26-1989, 28 7662, 42 7312, 24 8603, 26-0560
26-6984, 26-2745, 42-3995, 27-7740 42-3927
27-1122, 26-0535, 28 4672, 26 8052, 28-3528
22 5812, 22-6163, 42-1293, 40-4484, 26 0382
27-8160, 27-3841, 24-5188, 28-1062, 40-0774
40-1516, 28 6623, 24-4476, 26-9797, 24-5529
24-6448.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-8515, 28-6020, 24-0416, 28 8367, 26 3998
26-4776, 26 0375, 26-4792, 28 4367, 26-8051
27-0991, 28-1686, 43 1019, 27-1292, 26-4376
24-5942, 28-1928, 27-5822, 27-0922, 28-1862
43-1062, 26-3962, 22-7862, 27-5406, 27-1385


மங்களகரமான திறப்பு விழா

ஞானதுர்க்கா நகை மாளிகை

அன்புடையீர்!

இன்று 18-10-93 திங்கட்கிழமை காலை 9-12-10-36 மணி சுபமுகூர்த்த வேளையில் நாம் கஸ்தூரியார் வீதி 218H இலக்கத்தில் புதிய நகைமாளிகையை ஆரம்பிக்க உள்ளோம்.

வாடிக்கையாளர், அன்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆதரவு நல்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானதுர்க்கா நகைமாளிகை
ஸ்தாபனத்தார்.

(7725)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.